# நாவிதன்வெளி இலக்கியம்






டிசம்பர் - 2020

**கலாசார அலுவல்கள் திணைக்களம்**
**பிரதேச செயலகம்**
**நாவிதன்வெளி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவிதன்வெளி இலக்கியம்

கலாசார அலுவல்கள் திணைக்களம்

பிரதேச செயலகம்

கலாசாரப் பிரிவு, நாவிதன்வெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் : "நாவிதன்வெளி இலக்கியம்"


வெளியீடு : கலாசார அலுவல்கள் திணைக்களம்,
கலாசாரப் பிரிவு,
பிரதேச செயலகம்,
நாவிதன்வெளி.

பதிப்பு : டிசம்பர் 2020

பக்கம் : 76

நூலாசிரியர் : A.L.M. ஷினாஸ்
(கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்)

கணினி
வடிவமைப்பு : M.A.M. ஸன்பர் (Ascent Informatics)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார அலுவல்கள் திணைக்களம்

நோக்கு (Vision)

இலங்கை மக்களை ஆன்மீக ரீதியாக அபிவிருத்தியடைந்த கூருணர்வுமிக்க மனிதர்களாக மாற்றுவது என்ற ஒரே எதிர்பார்ப்பை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு, இலங்கைக்கேயுரிய கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதாகும்.

செயல் (Mission)

இலங்கை அடையாளத்துடனான இலக்கியக் கலையையும் கலாசார அலுவல்களையும் பேணல்மேம்படுத்தல் விரிவாக்கல் என்பவற்றிற்கான நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தலும் செயற்படுத்தலும்.

நோக்கம் (Objective)

இலங்கையின் கலாசார அலுவல்களை வினைத்திறன்மிக்க வகையிலும் பயனுறுதிமிக்க வகையிலும் நடைமுறைப்படுத்துவதற்காக திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றை அமுலாக்கல்.

இலங்கையின் இலக்கியத்தையும் கலையையும் பேணல், மேம்படுத்தல், பிரசாரம் செய்தல் என்பவற்றோடு சம்பந்தப்பட்ட கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

இலங்கை எழுத்தாளர்களையும் கலைஞர்களையும் கலாசாரத்தின் அங்கத்தினர்களாகக் கருதி, அவர்களுக்கு உதவிகளை வழங்குதல் மற்றும் படைப்புகளுக்குத் தேவையான உதவிகளை வழங்குதல்.

இலங்கையின் மொழி இலக்கியத்தையும் வரலாற்றையும் கலாசாரத்தின் அடிப்படையாகக் கருதி கலைக்களஞ்சியம், அகராதிகள், மகாவம்சம் என்பவற்றைத் தயாரிப்பதற்கும் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதற்குமான நூல்களைத் தயாரித்தல், நூல்களைக் கொள்வனவு செய்தல், கையேடுகளுக்கான போட்டிகளை நடத்துதல், அரிதாக இருக்கும் நூல்களை மீண்டும் அச்சிடுவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல், மற்றும் அவற்றைச் செயற்படுத்துதல்.

இலங்கையைப் பல் கலாசார நாடாகக் கருதி அனைத்து உப கலாசாரங்களுக்கும் நியாயமான முறையில் அவர்களின் கலைகளையும் நுண்கலைகளையும் பேணல், மேம்படுத்தல், பிரசாரம் செய்தல் என்பவற்றிற்காக நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல்.

இலங்கையின் கட்புல மற்றும் கண்ணுக்குத் தெரியாத கலாசார அம்சங்களுக்குப் புத்துயிரளித்து, அவை சமூகத்தின் அனைத்து பிரிவுகளிலும் ஊடுருவிச் செல்லக்கூடிய நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் செயற்படுத்துதல் என்பவற்றின் மூலம் நன்னெறிகள் நிறைந்த சமுதாயம் ஒன்றை உருவாக்குதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## பிரதேச செயலகம் - நாவிதன்வெளி

### நோக்கு (VISION)

தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யும் பிரதேசமட்ட அபிவிருத்தி செயற்பாடுகளின் மூலம் பிரிவிலுள்ள மக்களின் வாழ்கைத் தரத்தையும் நலனையும் மேம்படுத்தல்

### எமது பணிகள் (MISSION)

மக்களுக்கான சேவைகளை உறுதி செய்து மனிதாபிமான மற்றும் ஏனைய சேவைகளை வழங்கி அபிவிருத்திச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி பிரதேச செயலகத்துடன் தொடர்புபட்ட ஏனைய நிறுவனங்களின் இயைபுடைய நிகழ்ச்சித் திட்டங்களின் சேவைகளை ஒருங்கிணைத்தல்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவிதன்வெளி இலக்கியம்

டிசம்பர் - 2020 | இதழ் - 01

தேடிச்சோறு நிதம் நின்று
பல சின்னஞ்சிறு கதைகள் பேசி மனம்
வாடப் பல பணிகள் புரிந்து
நரை முடி கிழப்பருவ மெய்தி
கொடுங் கூற்றுக்கிரையென
பின்மாயும் - பல வேடிக்கை
மனிதரைப் போல,
நான் வீழ்வேன் என நினைத்தாயோ?

-பாரதி-

பிரதம ஆசிரியர் - A.L.M. ஷினாஸ்

இணை ஆசிரியர்கள் :
SMM. அஸாத்
P. சுஜீவனி
V. நகுலநாயகி
M.I.M. பாரிஸ்
V. ஜீவராசா
Y. கமல்ராஜ்
K. கிலசன்

ஆலோசனை :
திரு. S. ரங்கநாதன் (DS)
திரு. N. நவநீதராஜா (ADS)
ஜனாப் U.L. ஜவாஹிர் (Accountant)
திரு. K. யோகேஸ்வரன் (AO)
திரு. G. ஜெயகாந் (RDO)
ஜனாப் I.M. கஸ்ஸாலி (SDO)
திரு. S. லோகிதராஜ் (DO)

தொடர்புகளுக்கு:
நாவிதன்வெளி இலக்கியம்
கலாசார திணைக்களம்
பிரதேச செயலகம்
கலாசார பிரிவு, நாவிதன்வெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


| | |
|---|---|
| 01. நூலாசிரியரின் பதிவு | 01 |
| 02. ஆசிச் செய்திகள் | 02-05 |
| 03. வாழ்த்துச் செய்திகள் | 06-08 |
| 04. மாவட்ட கலாசார உத்தியோகத்தரிடமிருந்து | 09-10 |
| 05. நாவிதன்வெளி பிரதேச செயலகமும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிகளும் – ஏ.எல்.எம்.ஷினாஸ் (CDO) | 11-14 |
| 06. 2019 சில நிழல்கள்... | 15-16 |
| 07. கொரோனா வைரசும் சகவாழ்வும் – ம.முகர்ணியா | 17-21 |
| 08. இவர்கள் (கவிதை) – வி.ஜீவராசா | 22-23 |
| 09. கனவுக்கீறல் (சிறுகதை) – வை.கே.ராஜு | 24-27 |
| 10. இன ஒற்றுமை (கவிதை) – ஐ.எம்.பாத்திமா ஜனா | 28-29 |
| 11. சொறிக்கல்முனை திருச்சிலுவை திருத்தலம் – கலாபூசணம் ஜி.அன்ரனி | 30 -31 |
| 12. சிந்தனை துளிகள் –சு.சம்சன் | 32 |
| 13. தேசத்தைக் கட்டியெழுப்பும் கலை இலக்கியம் – மு.டுஜிநா | 33-37 |
| 14. கொரோனா கொண்டுவந்த மாற்றம் – ஏ.எஸ்.எம்.முஜாஹித் | 39-39 |
| 15. பாரதியார் (கவிதை) – கு.கிலசன் | 40-41 |
| 16. குறும்படக் கலையும் எமது பிரதேசமும் – ச.ருவுதரன் | 42-45 |
| 17. நகரை அழகுபடுத்தும் ஓவியங்கள் – வி.ஜீவராசா | 46 |
| 18. ஒழுக்கம் காக்கும் கலை (கவிதை) – வி.அதிஸ்ரா | 47 |
| 19. நாவிதன்வெளி பிரதேசத்தில் அழிந்து செல்லும் கலைகள் – கோ.விஜயராஜா | 48-51 |
| 20. பிஞ்சு மனங்கள் (கவிதை) – அனர் ஸிராஜ் சர்மி | 52 |
| 21. ந.பிருந்தாவின் ஓவியங்கள் | 53 |
| 22. வரயாடி ஆமை – ச.சரண்யா | 54 |
| 23. ஓடிப் 'போ' கொரோனாவே – க.அஸ்விக்கா | 55 |
| 24. நாட்டார் இலக்கியம் – ம.சியானுதன் | 56-60 |
| 25. கடனோடு வானுலகம் (கவிதை) – இ.நிஜந்தன் | 61 |
| 26. பதிவு செய்யப்பட்ட கலை மன்றங்களின் விபரம் | 62 |
| 27. பாரை நன்றாய் பார் (கவிதை) – நிஸா இஸ்மாயில் | 63 |
| 28. பிரதேச மட்ட இலக்கிய போட்டித் தொடரின் முடிவுகள்-2019 | 64-67 |
| 29. பிரதேச மட்ட இலக்கிய போட்டித் தொடரின் முடிவுகள்-2020 | 68-72 |
| 30.மூத்த கலைஞர் கலாபூசணம் ஜி. அன்ரனி பற்றிய ஒரு பார்வை – ஏ.எல்.எம். ஷினாஸ் | 73-75 |
| 31. பெரும் நன்றிகள் – வி. ஜீவராசா | 76 |
| 32. அம்பாறை மாவட்ட அரச அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்கள் | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூலாசிரியரின் பதிவு...

### பாதுகாக்கப்பட வேண்டிய கலை, இலக்கியம்

நாவிதன்வெளி பிரதேசம், அதன் அமைவிடம், கல்விவளர்ச்சி, விவசாய உற்பத்திகள், கால் நடை, மீன்பிடி, சமூக நலம் சார்ந்த விடயங்கள், இன நல்லுறவு, புரிந்துணர்வு, நவீனம் சார்ந்த கைத்தொழில்கள் போன்றவற்றை மையப்படுத்தி வளர்ந்து வருகின்ற போதும் பாதுகாக்கப்பட வேண்டிய நமது கலை இலக்கிய பாரம்பரிய பண்பாட்டு வாழ்வியல் அம்சங்களின்பால் எமது கவனம் இன்னும் ஈர்க்கப்படவேண்டும். இதனை 'நாவிதன்வெளி இலக்கியம்' எனும் இம் மலர் நிறைவேற்றும் என எதிர்பார்க்கின்றேன்.

2019ம் ஆண்டு ஏற்பட்ட ஏப்ரல் தாக்குதல் மற்றும் அதன் பின்னரான "கொவிட்-19" கொரோனா தொற்று நோயின் தீவிர தாக்கம் மற்றும் அதன் அச்சுறுத்தல் என்பன எமது கலை இலக்கிய வெளியீடுகளுக்கு அப்பால் எமது உறவுகளிலும் இடைவெளியை ஏற்படுத்தியது. அவ்விடைவெளியை திரும்பிப் பார்க்கும் போது 'நாவிதன்வெளி இலக்கியம்' ஓரளவு திருப்தியை தரும் என்ற நம்பிக்கையுடன் முதலாவது இதழினை இலக்கிய ஆர்வலர்களிடத்தில் ஒப்படைக்கின்றேன்.

ஆற்றல்கள் சிலவற்றை இந்நூல் அடையாளம் காட்டியுள்ளது. எதிர்கால இலக்கிய இடைவெளியில் நாவிதன்வெளி அதன் அடையாளத்தை ஆழ-அகலமாய் பதிக்க வேண்டும். எதிர்காலத்தில் இப்பணி தொடரவும் நாவிதன்வெளி இலக்கியம் தொடர்ச்சியாக வெளிவரவும் ஆற்றுப்படுத்துங்கள். நமது பிரதேச மண்ணின் இலக்கிய இருப்புக்கு எல்லோரும் ஒன்று சேர்ந்து வாய்க்கால் வெட்டுவோம் வாருங்கள். .

கலாசார அலுவல்கள் திணைக்களம், பிரதேச செயலகம் மற்றும் பிரதேச செயலகத்தின் கலாசார பிரிவுக்கு முடிந்தவரை முதுகெலும்பாய் இருங்கள். நாளைய சந்ததியினர் உங்களை நன்றியுடன் பேசுவார்கள்.

இந்நூல் வெளிவருவதற்கு எல்லா வழிகளிலும் துணையாக நின்று செயலாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

என்றும் சினேகங்களுடன்
ஏ. எல். எம் ஷினாஸ்
பிரதம ஆசிரியர் - "நாவிதன்வெளி இலக்கியம்"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

"நாவிதன்வெளி இலக்கியம்" எனும் இவ் இதழ் இலங்கைத் திருநாட்டின் கிழக்கே முத்தமிழாறும் புகழ் ஓங்கி நிற்கும் எம் நாவிதன்வெளி பிரதேசத்தில் எமது பாரம்பரிய கலை கலாசாரத்தை உயிர் ஊட்டும் வகையில் கிராமிய பண்பாடுகளோடு வெளி வருவது பாராட்டுக்குரியதாகும்.

இம்மண்ணின் விழுமியங்களை மீள் நினைவூட்டும் வகையில் "நாவிதன்வெளி இலக்கியம்", உருவாக்கப்பட்டுள்ளது. எமது சின்னஞ்சிறு குழந்தைகள் அனைவரையும் பாராட்டுவதுடன் மென்மேலும் அழிந்து செல்லுகின்ற பாரம்பரிய நிகழ்வுகளை இம்மண்ணில் மலர வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்து மக்கள் தமது சமய திருவிழாக்களை கொண்டாடும்போது தமிழர்களின் பாரம்பரிய கலாசார விழுமியங்களை பின்பற்றுவது போலவே ஏனைய சமயத்தவர்கள் அவர்களுடைய சமய முக்கிய நிகழ்வுகளின் போது அவரவர் கலாசார விழுமியங்களை வெளிப்ப டுத்தி வருகின்றனர்.

நாவிதன்வெளி பிரதேசம் வயலும் - வயல் சார்ந்த பிரதேசமாக காணப்படுவதனால் இங்கு அதிகமான மக்கள் நெல் வேளாண்மை செய்துவருகின்றனர். சேற்றில் நெல்மணிகளை விதைத்து அறுவடை ஆகும் வரைக்கும் இடம்பெறுகின்ற ஒவ்வொரு செயற்பாடுகளின் போதும், அவர்களது பண்பாட்டு வாழ்வியல் இலக்கியங்களை பேசு பொருளாகக் கொண்டு, இலக்கிய வடிவங்கள் வளர்ச்சி அடைந்துள்ளன. ஒரு சமூகத்தின் வாழ்வியல் அம்சங்கள். வழிபாட்டு நிகழ்வுகள் என்பன அடுத்த சந்ததிகளுக்கு கொண்டு செல்ல வேண்டியது நமது பொறுப்பாகும். இதனை நாவிதன்வெளி இலக்கியம் சிறப்பாகச் செய்யும் என எதிர்பார்க்கின்றேன்.

வெளியீட்டு நிகழ்வானது எல்லா வகையிலும் சிறப்பு பெற்று மணம் வீச எனது வாழ்த்துக்கள்... நல்லாசிகள்....

சிவஸ்ரீ சபாபதி சிவாதர குருக்கள்

ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்

அன்னமலை

நாவிதன்வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



"இயற்கையின் மொழிகள் புரிந்து விட்டால்
மனிதனின் மொழிகள் தேவையில்லை
இதயத்தின் மொழிகள் புரிந்து வட்டால்
மனிதனுக்கு மொழியே தேவையில்லை"

தமிழ் இலக்கியம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரான உலகின் சிறந்த இலக்கியங்களில் ஒன்று வாழ்வின் பல்வேறு கூறுகளை தமிழ் இலக்கியங்கள் இயம்புகின்றன. தமிழ் இலக்கியத்தில் வெண்பா, குறள், புதுக்கவிதை, கட்டுரை, பழமொழி தொன்னூற்றாறு வகை இலக்கியங்கள் என பல வடிவங்கள் உள்ளன. தமிழில் வாய்மொழி இலக்கியங்களும் முக்கிய இடம் வகிக்கின்றன.

அந்த வகையில் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வெளியிடப்படும் "நாவிதன்வெளி இலக்கியம்" என்ற இந்நூல் பல அறிவு சார்ந்த கருத்துக்களை அள்ளித்தரும் என்பதில் ஐயமில்லை. பாய்ந்து வரும் நீரூற்றிலிருந்து தாகத்தை தனிப்பதைப் போல் இந்நூலிலிருந்து வெளிவரும் ஆக்கங்கள் எம் அறிவிற்கான தாகத்தையும் தீர்க்கும் எனும் நம்பிக்கையுடன் வெளியீட்டுக் குழுவினருக்கும் என் இதயம் நிறைந்த ஆசிகளைக் கூறிக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.


"உடல் மண்ணிற்கு உயிர் தமிழுக்கே"

**Rev.Fr.L.Leslie Jeyakanthan**
**The Administrator**
**Holy Cross Shrine**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ආශිර්වාද පණිවිඩය



ඉහත නම් සඳහන් ලුම්බිණි විහාරස්ථානය මධ්‍යම කඳවුර නගර මධ්‍යයේ පිහිටා ඇති අතර සිංහල, දමිළ, මුස්ලිම් ප්‍රජාව සමග ඉතාම මිත්‍රශීලීව හා ආගමික සංහිඳියාවෙන් යුක්තව ක්‍රියා කරනු ලබයි. නාවිදන්වෙලි ප්‍රාදේශිය ලේකම් කොට්ඨාශයට අයත් එකම බෞද්ධ විහාරස්ථානය මෙම විහාරස්ථානයයි. සියලු රාජ්‍ය ආයතන මේ විහාරස්ථානය පිළිබඳව අවධානය යොමු විය යුතු බව සිහිපත් කරමි. බහු ජාතික, බහු ආගමික සියලු දෙනාටම යහපතක්ම වේවා.

"සබ්බේ සත්ථා භවන්තු සුඛි තත්ථා"

විහාරාධිපති
පූජ්‍ය ගන්තුනේ සුචින්න හිමි
ලුම්බිණි විහාරය
මධ්‍යම කඳවුර.
2020.12.22
දුරකථන අංකය -071-4496576



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் கலாசாரப் பிரிவால் வெளியிடப்படும் 'நாவிதன்வெளி இலக்கியம்' நூலுக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகிறேன். இலக்கியங்கள் மனித வாழ்வை செம்மைப்படுத்துவனவாகும். அந்த வகையில் மக்க ளும் வாழும் நாவிதன்வெளி பிரதேசத்தின் மாண்பை வெளிப்படுத்தும் இந்நூல் இங்கு வாழும் மக்களின் வாழ்க்கை கோலங்களையும் காலத்தின் மாறுதல்களையும் தெட்டத் தெளிவாக வெளிக்கொணர்கிறது.

இஸ்லாமியத் தமிழ் இலக்கியமும் தொன்று தொட்டு வளர்ச்சி கண்டதொன்றாகும். காலத்துக்கு காலம் பிரதேசத்திற்கு பிரதேசம் பல மாற்றங்களுடன் வளர்ச்சியடைந்து வந்துள்ளது. எமது நாவிதன்வெளிப் பிரதேசத்திலே நாட்டார் இலக்கியம் சிறப்புற்று விளங்குகிறது. தாலாட்டு, கோலாட்டம்,திருமணம் மற்றும் சுப நிகழ்வுகளில் குரவையிட்டும் பாடி மகிழ்ந்தும் முஸ்லிம்களின் பாரம்பரிய கலாசார பண்பாடுகள் வெளிப்படுத்தப்படுகின்றது.

மனித வாழ்வு செம்மையுறவும் மானிடப் பண்பு செழித்தோங்கவும், இலக்கியங்கள் முக்கிய பங்குவகிக்கின்றன. மேலும் இவ்வாறான வெளியீடுகள் இப்பிரதேசத்தின் வரலாற்றை எதிர்கால சந்ததியனருக்கு எடுத்தியம்பும் எழுத்து மூல ஆவணமாக உள்ளது. மேலும் பல் துறை ஆளுமைகளை வெளிப்படுத்தும் ஊடகமாக இப்புத்தகம் அமைய வேண்டும் எனவும் வாழ்த்துகிறேன்.

மௌலவி. எஸ்.எல்.சலீம் BA.(JP)
பிரதித் தலைவர்
ஜம்மியதுல் உலமா சபை,
மத்திய முகாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்"(எல்லா ஊரும், எம் ஊர் எல்லா மக்களும் எம் உறவினரே)**

- புறநானூறு, கணியன் பூங்குன்றனார் -

நாவிதன்வெளி பிரதேசம் தமிழ், முஸ்லிம், சிங்களம் என பல்லின மக்களையும் கொண்டுள்ள ஒரு பிரதேசமாகும். இதனால் இப்பிரதேசம் பல்லின கலாசார பண்பாட்டு விழுமியங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. இம் மக்களின் வாழ்வியலில் பின்னிப் பிணைந்துள்ள கலாசார விழுமியங்களை பாதுகாப்பது ஒவ்வொருவரிதும் சமூக கடமையாகும்.

நாவிதன்வெளி பிரதேசத்தில் இலைமறை காயாக இருக்கின்ற கலைஞர்களை வெளிக் கொண்டு வருவதுடன் அவர்களது படைப்பாற்றலை ஆவணப்படுத்தும் முயற்சியே இந்த "நாவிதன்வெளி இலக்கியம் - 2020" என்ற நூலாகும். நாவிதன்வெளி பிரதேசத்தின் கலை இலக்கிய பண்பாட்டு அம்சங்களை வெளிப்படுத்தும் மலர் ஒன்றினை வெளிக்கொண்டுவர வேண்டும் என்று மிக நீண்ட காலமாக பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. எனினும் தற்போது கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையோடு இந்த நூல் வெளியிடப்படுவதை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன். குறுகிய காலத்திற்குள் ஒரு மலரை வெளியீடு செய்வதென்பது இலகுவான காரியமல்ல, இருந்தும் எமது பிரதேசவாழ் கலைஞர்கள் அலுவலக உத்தியோகத்தர்கள் குறிப்பாக கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரது ஒத்துழைப்புடன் இம்மண்ணில் "நாவிதன்வெளி இலக்கியம்-2020"தடம்பதித்துள்ளது. இவ்வருடம் கொரோனா (Covid-19) அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் வெளிவருகின்ற இந்நூல் சிறந்த ஒரு படைப்பாகவும் எதிர்கால சந்ததிகளுக்கு வழிகாட்டியாகவும் அமையும் என எதிர்பார்க்கின்றேன்.

நவீன தகவல் தொழில்நுட்ப சாதனங்களின் அதிகரித்த பயன்பாடு, தேவை மற்றும் தவிர்க்க முடியாத தன்மை என்பவற்றால் இன்று கலாசார பண்பாட்டு பாரம்பரியங்கள் சிறிது சிறிதாக மாற்றங்களுக்குள்ளாகி வருவதைக் காணலாம். எனவே இவ்வாறான ஒரு சூழலில் எமது பிரதேச கலைகளைப் பேணி பாதுகாப்பது பிரதேசத்தில் வாழும் அனைவரினதும் தலையாய கடமையாகும். எதிர்காலத்தில் இப் பிரதேசத்தின் கலை இலக்கிய பண்பாட்டு அம்சங்களை வெளிக்கொண்டு வருவதற்கு இன்றுள்ளது போன்று இன, மத, மொழி வேறுபாடுகளுக்கு அப்பால் அனைவரும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சமூகத்தின் மறுமலர்ச்சிக்கு சிறப்பான இலக்கியங்களே கருப் பொருளாக அமைகின்றது. இந்நூல் முயற்சிக்கு அனைத்து வகையிலும் பங்களிப்பை நல்கிய அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு.சோ. ரங்கநாதன்
பிரதேச செயலாளர்
நாவிதன்வெளி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையோடு வெளியிடப்படும் "நாவிதன்வெளி இலக்கியம்" சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தியை வழங்குவதில் மகிழ்சியடைகிறேன்.

எமது கலை, இலக்கிய பண்பாட்டம்சங்களை பிரதேச கலை இலக்கிய விழா ஊடாக வருடா வருடம் வெளிப்படுத்துவது முக்கியமான ஒன்றாகும். எனினும் இம்முறை நாட்டில் ஏற்பட்ட கொரோனா தொற்றுநோய் அச்சுறுத்தல் எமது கலை கலாசார பண்பாட்டு அம்சங்களை வெளிப்படுத்துவதற்கு தடையாக அமைந்துவிடக்கூடாது என்பது எமது பிரதேச கலைஞர்களின் எதிர்பார்ப்பாக அமைந்துள்ளது.

எமது பிரதேசசெயலக பிரிவுக்குட்பட்ட மக்களது கலை, கலாசார இலக்கிய அம்சங்களை இளம் தலைமுறையினரும் அறியும் வகையில் அவை தொடர்பான ஆவணப்படுத்தல் எனும் நோக்குடனும் இலக்கிய படைப்பாளிகளுக்கான ஒரு களமாகவும் "நாவிதன்வெளி இலக்கியம்" எனும் எம் இம்மலர் வெளிவருகின்றமை பாராட்டத்தக்கதாகும். எதிர்காலத்தில் எமது கலை இலக்கிய பயணத்தின் போது காத்திரமான படைப்பாளிகளும் படைப்புக்களும் வெளிவர வேண்டும் என்பது எனது எண்ணமும் அவாவுமாகும். காலவோட்டத்திற்கு அமைய நமது கலை இலக்கியங்களின் தனித்துவம், சிறப்புக்கள் இழக்கப்படாமல் நிலைத்து நிற்கக்கூடிய வகையில் அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டியது கட்டாயமானதாகும்.

இலக்கியம் நூலுக்கு அனுசரணை வழங்கிய கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கும் படைப்பாக்கங்களை வழங்கிய எழுத்தாளர்கள், பிரதேசமட்ட இலக்கிய போட்டித் தொடரில் பங்குபற்றிய விண்ணப்பதாரிகள் மற்றும் இதில் வெற்றிபெற்ற மாணவர்கள் ஆகியோருக்கும் மலருக்கு வாழ்த்துச்செய்திகளை வழங்கிய அதிகாரிகள், ஆலோசனை வழங்கிய கல்விமான்கள், மலர்வெளிவர முழு மனதுடன் பாடுபட்ட பிரதேச செயலகத்தின் கலாசார பிரிவு உத்தியோகத்தர்கள், நூலாசிரியராக இருந்து செயற்பட்ட கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் உட்பட அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு வாழ்த்துக்களையும் கூறிக்கொள்கிறேன். இனிவரும் காலங்களில் தொடர்ந்து இம்மலர் வெளிவர வேண்டும் என்பதுடன் அவை பிரதேச ஆற்றல்களை நிலைபேறாகப் பேண உதவிபுரிய வேண்டுமெனவும் பிராத்திக்கின்றேன்.

திரு.ந.நவநீதராஜா
உதவிப்பிரதேச செயலாளர்
நாவிதன்வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அம்பாரை மாவட்ட
## கலாசார உத்தியோகத்தரிடமிருந்து...

"நாவிதன்வெளி இலக்கியம்" அனைத்து இதயங்களிலும் இறுக இடம்பிடிக்க வேண்டும்.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம் நடாத்தப்படுகின்ற பிரதேச கலாசார விழாவின் நிமிர்த்தம் கொரோனா (Covid -19) பரிசாக வெளிவரும் இவ் இலக்கியம் மலரூடாக உரையாட சந்தர்ப்பம் தந்த இறைவனுக்கு முதலில் நன்றி செலுத்தியவனாய்

கலாசார அலுவல்கள் திணைக்களமானது கருவிலுள்ள சிசுக்களை மையமாகக் கொண்ட "அழகிய குடும்பம்" வேலைத்திட்டத்தில் ஆரம்பித்து மரணித்த கலைஞர்களுக்கான இரங்கல் உரை வரையான நீண்டு விரிந்து ஆழ அகலமான வகையில் தனது வேலை திட்டங்களை மேற்கொண்டு வருவதன் ஒரு அங்கமே பிரதேசத்தில் உள்ள அனைத்து கலைஞர்களையும் உள்ளடக்கிய வருடாந்த கலாசார விழா இதன் ஒரு செயற்பாடாகவே பாடசாலைகளில் பாலர் பிரிவு மாணவர்கள் முதல் 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து தரப்பினரிடமிருந்தும் ஆக்கங்களை பெற்று போட்டிகளை நடாத்தி இறுதியில் அனைத்து கலைஞர்களையும் இணைத்து நடைபெறுகின்ற கலாசார விழா இவ்வருடமும் நடத்துவதில் கொரோனா ஒரு பாரிய சவாலாக உள்ளமையால் வருடாந்த விழாவினை நினைவு கூர்ந்தும், இதற்கான போட்டிகளில் பங்குபற்றியவர்களை நிர்க்கதிக்குள்ளாக்காத வகையிலும் எதிர்காலத்தில் இவ்விழாக்களை சிறப்பாக நடத்துவதற்குரிய முன்னேற்பாடாகவும் பல பிரயத்தனங்களுக்கு மத்தியில் இம்மலர் வழமைக்கு மாற்றமான முறையில் இவ்வருடம் வெளிவருகிறது.

மலர் வெளியீட்டுடனான விழாக்களை நடாத்துவதற்கு பாரிய நிதி முதலீடுகளுடனான ஏற்பாடுகள் இடம்பெறுவது வழமை. ஆனால் இவ்வருடம் மேற்படி நிலைமைகளைக் கருத்தில் கொண்டு குறுகிய காலப்பகுதிக்குள் திணைக்களத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதிக்குள் கலைஞர்களை ஒன்று கூட்டாமல் போட்டியாளர்களுக்கான பரிசில்களுடன் சான்றிதழ்களையும் அவரவர் வீடுகளுக்குச் சென்று வழங்குவதாகவும் போட்டிகளில் பங்கு பற்றி முதலிடம் பெற்ற ஆக்கங்களையும் பிரதேசத்திற்கு உரித்தான தனித்துவமான கலை இலக்கிய துறைசார் விடயம் தொடர்பான ஆய்வுக்கட்டுரையுடன் இவ்வருடம் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற வேலைத்திட்டங்களையும் இணைந்ததாக இம்மலர் வடிவமைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய இலக்கிய விழாவில் வெளிவருகின்ற இலக்கியம் என்ற நினைவு மலரின் பெயரையே இதற்கு வைப்பதெனவும், மேலதிக மாவட்ட செயலாளர் அவர்களது தலைமையில் நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவிற்கேற்ப உத்தியோகத்தர்களால் இது தொடர்பான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது. நிதி, கால அவகாசம் மற்றும் Covid-19 போன்ற விடயங்களை கருத்தில் கொண்டு இதில் ஏனைய கலைஞர்களது ஆக்கங்களை இணைத்துக் கொள்ளாததையிட்டு வருத்தமடைகின்றேன்.

இதனோடு இணைந்ததாக கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேலைத்திட்டங்களை மக்கள் மயப்படுத்தும் ஐந்தாண்டு வேலைத்திட்டத்தின் கீழ் எல்லா பிரதேச செயலகங்களிலும் ஒரு கலாசார விளம்பரப்பலகையினையும் ஏற்பாடு செய்யப்படுகிறது. அதாவது கடந்த நான்கு வருடங்களில் திணைக்களத்தினூடாக 11 தலைப்பில் சுமார் 112 வகையான வேலைகள் அம்பாறை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் இது தொடர்பான போதிய தெளிவு கலைஞர்கள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் காணப்படாமை உணரப்பட்டுள்ளது.

உள்ளும் புறமும் பல்வேறு நெருக்குதல்களுக்கு மத்தியில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேலை திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் மாவட்ட செயலாளர் ,மேலதிக மாவட்ட செயலாளர்கள் பிரதேச செயலாளர்களுடன் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்களது பங்களிப்பு மகத்தானது.

ரீ.எம்.றின்சான்
மாவட்ட கலாசார உத்தியோகத்தர்
மாவட்ட செயலகம்
அம்பாறை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிகளும் நாவிதன்வெளி பிரதேச செயலகமும்

கிராம மட்டங்களில் உருவாகின்ற கலாசார மற்றும் கலை படைப்புகள் மேலெழுந்து செல்லாமல் குறித்த மட்டத்திலேயே உருவாகி அழிந்து செல்வதை கடந்த காலந்தொட்டு வெளிப்படையாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதன் காரணமாக நகரங்களில் உருவாகும் கலைப் படைப்புகள் மாத்திரம் தேசிய மட்டத்தின் கலாசார மற்றும் கலையாக இருந்து தேசிய மற்றும் சர்வதேச தளம் பரவலாக்கப்படுகின்றது. இது பெரும்பாலும் கலைக்கும் - கலைஞர்களுக்கும் சமநிலையற்ற யதார்த்தத்தை சமூகமயப்படுத்துகிறது. வெவ்வேறு காலங்களில், பல்வேறு அரசாங்கத்தினால் கலை மற்றும் கலாசார படைப்புக்கள் மற்றும் கலைஞர்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு சாதகமான வேலைத்திட்டங்கள் நடைபெற்றுள்ளதுடன் தற்போதும் குறித்த வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இவை கலைஞர்களுக்கு நன்மை பயக்குவதுடன் பல வாய்ப்புகளையும் உருவாக்குகின்றன. ஒரு சில நகர்ப்புற வாழ்க்கை வாழும் குழுக்கள் மற்றும் ஒரு சில இலங்கை கலைஞர்கள் மட்டுமே முடிவுகளை எடுப்பது தற்போது கண்டறியப்பட்டுள்ளது.

கலை மற்றும் கலாசாரத்தின் பாதுகாப்பு மற்றும் கலைஞர்களின் தேசிய நலன் மற்றும் ஊக்குவிப்பு போன்றவற்றை முன்னெடுக்க வேண்டுமானால், இந்த ஏற்றத்தாழ்வு குறைக்கப்படுவதற்கு முன்னர் முன்னேற வேண்டியது அவசியம். அனைத்து கலைஞர்களையும் பிரதேச மட்டத்திலிருந்து தேசிய ரீதியில் அடையாளம் காண ஒரு விரிவான திட்டத்தின் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கத்தோடு கலாசார அலுவல்கள் திணைக்களம் பிரதேச ரீதியாக பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச மட்டத்தில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் சில…

- தேசிய ரீதியாக அரச சாஹித்திய, கலாபூஷணம், சிறுவர் ஓவியம் மற்றும் சிற்பம், நாடகம், இசை, நடனம், புகைப்படம், வானொலி, தொலைக்காட்சி, பொம்மலாட்டம், விசேட தேவையுடையோர், அரச ஊழியர்களுக்கான ஆக்கத்திறன், குறுந்திரைப்படம் போன்ற 15 விருது வழங்கள் விழாக்களுக்கு கலைஞர்களை ஊக்குவித்தல்
- பிரதேச, மாவட்ட மற்றும் தேசிய கலை இலக்கிய போட்டித் தொடரை வருடா வருடம் பாடசாலை மட்டத்திலும் திறந்த போட்டித் தொடராகவும் நடாத்தி வெற்றியாளர்களை கௌரவித்தல்
- பிரதேச மட்டத்தில் “சுவதம்” கலைஞர் கௌரவிப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்துதல்
- கலை மன்றங்கள் மற்றும் கலைப் பாடசாலைகளை உருவாக்கி கலைத்துறையை வளர்சியடையச்செய்தல்
- பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் கலைஞர் அதிகார சபையை நிறுவி தேசிய – பிரதேச கலைஞர்களுக்கிடையிலான இடைவெளியை குறைத்து கலை இலக்கியத் துறையை கட்டியெழுப்புதல்.
- கலைஞர் நலநோம்பு வேலைத்திட்டத்தின் கீழ் கலைஞர் அடையாள அட்டை, வருடாந்த உதவிக் கொடுப்பனவு, தேசிய தரவுத் தளம், மருத்துவ கொடுப்பனவு, ஓய்வூதியம், கலைக்கிராமம் மற்றும் வருட ஒன்றுகூடல் போன்ற வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல்
- “தொளஸ்மகே பஹன” எனும் 12 மாதங்களுக்குமான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்
- விசேட தினங்கள் மற்றும் விழாக்கள் தொடர்பான கலை நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தி நடாத்துதல்
- பாரம்பரிய கலைகளான கூத்து, கரகம்,காவடி, கும்மி, கோலாட்டம், சிலம்பாட்டம், பரதம், தற்காப்பு, அரிய செதுக்கல் கலை வேலைப்பாடுகள் மற்றும் மெஜிக் போன்ற கலைகள் தொடர்பாக விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல்
- பாரம்பரிய உணவு, வைத்தியம் விளையாட்டு போன்றவற்றை பிரதேச மட்டத்தில் பாதுகாப்பதற்கான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கலாசார அமைச்சு, கலாசார திணைக்களம், மாவட்ட செயலகம், பிரதேச செயலம் மற்றும் கலாசார மத்திய நிலையங்கள் ஊடாக முன்னெடுக்கப்படும் கலை இலக்கியம் மற்றும் கலைஞர்களின் ஊக்குவிப்பு வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதும் இணைந்து பணியாற்றுவதும்
- அவ்வப்போது பணிக்கப்படுகின்ற விசேட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

1956ஆம் ஆண்டு பதவிக்கு வந்த எஸ்.டப்ளியு.ஆர்.டீ. பண்டார நாயக்கவின் மக்கள் அரசாங்கத்தின் கீழ் 1956ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26ஆம் திகதியிட்ட 10975ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் கலாசார அலுவல்கள் திணைக்களம் அமைக்கப்பட்டது. இலங்கை அடையாளத்துடனான இலக்கியக் கலைகளையும், கலாசார அலுவல்களையும் பேணல், மேம்படுத்தல் மற்றும் விரிவாக்குதல் என்பவற்றிற்காக நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல், செயற்படுத்துதல் என்பவற்றின் மூலம் கலாசாரத் துறையின் மேம்பாட்டுக்கு இத்திணைக்களம் பாரியளவில் சேவையாற்றுகின்றது.

இலங்கை கலைப் பேரவையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள தேசிய நாடகத் துணைப்பேரவை, இலக்கியத் துணைப்பேரவை, நாட்டிய மற்றும் நூலாட்டக் காட்சித் துணைப்பேரவை, இசைத் துணைப்பேரவை, ஓவியம் மற்றும் சிற்பக்கலைத் துணைப்பேரவை, என்பவற்றுடன் இணைந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் இம் மாபெரும் பணிக்கு உதவி வழங்குகின்றது. அதன்மூலம் இயல்பாகவே பல்வேறு கலாசார ஆற்றல்களைக் கொண்ட படைப்பாளிகளை இனங்கண்டு அத்திறைமைகளை வளர்ப்பதும் மதிப்பதும் இத்திணைக்களத்தின் பணிகளில் தனித்துவமானவையாகும்.

நாவிதன்வெளி பிரதேசம் 1952ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் சம்மாந்துறை பிரதேசத்தோடு இணைந்ததாகவே காணப்பட்டது. பின்னர் கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நாவிதன்வெளி பிரதேசத்தின் அன்னமலை, நாவிதன்வெளி, சவளக்கடை, சொறிக்கல்முனை, மத்திய முகாம் போன்ற கிராமங்களில் மக்கள் குடியேற்றப்பட்டனர். 1963 ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் இக் கிராமத்தில் உள்ளூராட்சி மன்ற அதிகாரம் கிடைக்கப் பெற்றது. இதனைத் தொடர்ந்து நாவிதன்வெளி பிரதேசத்திற்கான தனியான பிரதேச செயலகமும் கிடைக்கப்பெற்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு வாழும் மக்கள் தமது ஜீவனோபாய தொழிலாக விவசாயம், கால்நடை, மீன்பிடி போன்றவற்றை மேற்கொண்டு வருகின்றனர். தமிழ், முஸ்லிம், சிங்களம் என மூவின மக்களும் வாழ்ந்து வருகின்றனர். ஏனைய கிராமங்களிலும் பார்க்க இங்கு வாழும் மக்களின் கலை கலாசார பண்பாட்டு வாழ்வியல் அம்சங்கள் பண்மைத்துவம் கொண்டதாக காணப்படுகின்றன. நாவிதன்வெளி பிரதேச செயலகம் இப்பிரதேச மக்களின் கல்வி சமூக பொருளாதார அபிவிருத்திக்கு பல்வேறு வழிகளிலும் சேவையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஊடாக இங்கு வாழும் பல்லின மக்களையும் ஒன்றிணைத்து இன, மத, மொழி வேறுபாடுகளுக்கு அப்பால் பிரதேசத்தின் கலை இலக்கியத்திற்கும் கலைஞர்களுக்கும் பல்வேறு ஊக்குவிப்பு வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. தொடர்ந்தும் இப்பணிகளை சிறப்பாக முன்னெடுப்பதற்கு இப்பிரதேச கலைஞர்களின் பங்களிப்பு இன்றியமையாததாகும்

ஏ.எல்.எம். ஷினாஸ்
கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்,

நாவிதன்வெளி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2019 சில நிழல்கள்...



'தொளஸ்மகே பஹன' வேலைத்திட்டத்தின் கீழ் நடாத்தப்பட்ட கவியரங்கு ...



மாவட்ட கலை இலக்கியப் பெருவிழாவின் போது...



"அர்த்தமுள்ள சுதந்திரம்" விவாதப் போட்டியும் பரிசளிப்பும்...



கலை மஞ்சரியும் கலைஞர் அடையாள அட்டை வழங்கும் நிகழ்வும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2019 சில நிழல்கள்...



'சுவதம்' கலைஞர்கள் கௌரவிப்பு நிகழ்விலிருந்து...



உதவி அவசியமான கலைஞர்களுக்கு காசோலை வழங்கும் போது...



'தொளஸ்மகே பஹன' வேலைத்திட்டத்தின் கீழ் நடாத்தப்பட்ட சர்வதேச சிறுவர் தின நிகழ்வு...



தேசிய வாசிப்பு மாத வேலைத்திட்டம்...



பிரதேச கலை இலக்கிய விழாவின் பதிவுகள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா வைரசும் சக வாழ்வும்

- மதிவண்ணன் முகர்ணியா -

"பணமோ, பட்டமோ இல்லாதவரும் புகழ் அடைவதற்கான வழி இலக்கியம் இயற்றுவதே" தாமஸ் கார்லைன் அவர்களின் கூற்றை முன்வைத்து எனது இலக்கிய படைப்பிணைத் தொடர்கிறேன்.

இன்றைய இலத்திரனியல் உலகில் விஞ்ஞான தொழினுட்ப வளர்ச்சி அதிகரித்துச் செல்வதால் உலக நாடுகளில் விண்வெளி ஆய்வுகள், புதிய புதிய கண்டுபிடிப்புக்களால் அதிக போட்டித் தன்மையான நிலைமைகள் காணப்படுகின்றன. இத்தகைய நிலைமைகளால் மனித வாழ்க்கைக் கோலங்களில் அதீத மாற்றமும், வளர்ச்சியும் ஏற்படுகின்றன. இத்தகைய நிலைமைகளால் ஒரு புறம் நன்மைகள் ஏற்பட மறு புறம் நுண்கிருமிகளின் தாக்கமும் புதுப் புது வைரசுகளின் தோற்றமும் உலகையே மாற்றிப் போடுகின்ற நிலைமைகள் உருவாகி விட்டன. இதனால் எமது மனித குலமே இன்று பெரும் அழிவிற்கு மத்தியில் போராடிக் கொண்டிருக்கின்றது.




அதாவது இரண்டாயிரத்து பத்தொன்பதாம் ஆண்டு மார்கழி மாதம் சீனாவில் மிகத் தீவிரமாக ஒரு வைரஸ் தலைவிரித்தாடிக் கொண்டிருந்தது. இன்றும் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கின்றது. அது வேறெந்த வைரசும் இல்லை இந்த கொரோன வைரஸ் தான். கொரோனா வைரசுக் குடும்பத்தை சேர்ந்த கூர்ப்புரீதியாக விகாரமடைந்த ஒரு புதிய வகையான வைரசுக் கிருமியே இந்த 2019NOVEL CORONA VIRUS இது 2019-nCov எனும் வைரசினால் ஏற்படுத்தப்படும் நோயாகும்.

தன் ஆட்சி ஒருநாட்டில் மட்டும் இருக்கக் கூடாது இந்த முழு உலகையுமே தான் ஆட்சிசெய்ய வேண்டும் என்ற ஒரு நோக்கத்தோடு இவ் வைரஸானது அன்று சீனாவில் தொடங்கி படிப்படியாக அமெரிக்கா, அத்தாலி, பிரான்ஸ், இந்தியா போன்ற பல நாடுகளில் பரவலடைந்து வருகிறது. அங்கு மட்டுமல்ல தன் ஆட்சியை இலங்கைத் திரு நாட்டிலும் நடத்த வேண்டும் என நினைத்த இந்த அரக்கன் சில மாதங்களாக பல்லாயிரம் மீற்றர் கடல் கடந்து எமது இலங்கைத் தீவை இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு தை மாதம் இருபத்தேழாம் திகதி சீனப் பெண் ஒருவரில் தங்கி பயணத்தை எம் நாட்டில் முடித்து . இங்கு தன் வீரியத்தை ஆரம்பித்துக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் விளைவாக நிம்மதியாக, சந்தோஷமாக, ஒற்றுமையாக, ஆரோக்கியமாக வாழ்ந்து வந்த எம் பல்லின சமூகத்தை இன்று நிம்மதியிழக்கச் செய்து ஒவ்வொரு சமூக நபரையும் தனித்தனியாகப் பிரித்து ஒருவருடன் ஒருவர் அருகில் நின்று பேசக் கூட முடியாத நிலையை எம் தாய் நாட்டிற்குள் எவ்வாறோ நுழைந்த இக் கொரோனா ஏற்படுத்தி விட்டதென்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

அன்று இயற்கையை ரசித்து, இயற்கைக் காற்றை சுவாசித்து உணவே நோய்க்கான மருந்தென வாழ்ந்த எமது சமூகத்தை இன்று மருந்தே உணவு எனும் நிலைக்குத்தள்ளியது மாத்திரமல்லாமல் எமது கலாசாரத்தையும் மாற்றிவிட்டான் இந்தக் கொடிய அரக்கன் கொரோனா.




காய்ச்சல், வறட்டு இருமல், மூச்சுத்திணறல் என்பவற்றோடு சிலருக்குச் சோர்வு, வயிற்றுபோக்கு, தலையிடி, மூட்டுவலி, தொண்டை நோவு போன்றன இந்நோயின் அறிகுறிகளாகும். இந் நோயின் தொற்றுக்குள்ளானவர் இருமும் போது அல்லது தும்மும் போது விசிறப்படும் சளித் துணிக்கைகள் மூலமாகவே இந்த வைரசுக் கிருமிகள் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குப் பரவும். இந்த நோயினால் பாதிக்கப்பட்டவரை நேரடியாகத் தொடுவதன் மூலமாக அல்லது அவரிடமிருந்து விசிறப்பட்டு மேற்பரப்புக்களில் இருக்கும் சளித் துணிக்கைகளைத் தொட்டுப் பின்னர் அதே கைகளினால் எமது மூக்கு, வாய் மற்றும் கண்களைத் தொடுவதன் மூலமாகவே இந்த வைரஸ் பரவுகிறது.

இந்த நோயை குணப்படுத்தலாமா? என்றால், ஆமாம் நிச்சயமாக. இதற்கென்று குறித்த மருந்துகள் இல்லையாயினும், அறிவுரைகளுக்கு ஏற்றவாரு மருந்துகளை உட்கொள்வதன் மூலம் முழுமையாக குணப்படுத்திடலாம். இந் நோயானது வயதானவர்கள், நாட்பட்ட நோயாளிகளினால் பாதிக்கப்பட்டவர்கள், நோய் எதிர்ப்பு சக்தி குறைவானவர்கள், கர்பிணித் தாய்மார்கள் மற்றும் சிறுவர்களையே அதிகம் பாதிக்கின்றது.

இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர், இந் நோய் பரவும் அல்லது நோயாளர்கள் பராமரிக்கப்படும் இடங்களுக்குச் சென்று வந்தவர்கள்,இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களோடு நெருக்கமாக பழகியவர்கள் பரவக் கூடிய வாய்ப்புக் காணப்படுகின்றது. இப்போதைக்கு வெளிநாட்டிலிருந்து வருகைதந்த, தரவிருக்கின்றவர்கள் மூலமாகவே எமது நாட்டில் இந்நோய் பரவுவதற்கு வாய்ப்புள்ளது. இலங்கை மக்களை உருக்குலைத்த இக் கொரோனா மக்களை மாத்திரமில்லாமல் இலங்கைப் பொருளாதாரத்தையும் உருக்குலைத்து விட்டது. அதாவது போக்குவரத்துத்துறை, கல்வித்துறை, சுகாதாரத்துறை, தொடர்பாடல் துறை போன்ற பல்வேறு துறைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று தன் வீரியத்தைக் காட்டி, சீர்குலைத்து, நம் தாய்நாட்டிலே தலைவிரித்தாடிக் கொண்டிருக்கின்றது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

"உழைப்பு தான் மனிதனுக்கு உயிர் போன்றது வாழ்வில் உழைத்து உயர வேண்டுமென்ற எண்ணம் இருந்தால் அதுவே சிறந்த மருந்தாகும். அது ஆக்கும் சக்தி. இறுதி மூச்சுவரை உழைப்பதற்கான உந்து சக்தியும் கூட" என அன்று கார்லைல் கூறினார். ஆம் முற்றுமுழுதாக இது உண்மையான கருத்தே. இது போன்றே எமது மக்கள் சிறந்த எண்ணங்களை நினைவில் வைத்து இதுவரை காலமும் தமது ஜீவனோபாயத்தை மேற்கொண்டு வந்தனர். ஆனால், இக் கொடிய நோய் நிலைமை காரணமாக தற்போது எமது நாட்டிலுள்ள ஊரடங்கு, தனிமைப்படுத்தல் காரணமாக எமது மக்களின் அன்றாட வாழ்வு ஒரு போராட்டகரமான வாழ்வாக மாறியுள்ளது. "சமூகம், நாடு முன்னேற வறுமையையும், அறியாமையையும் போக்க வேண்டும்" என அன்று எமது தலைவர்களில் ஒருவரான காமராசர் கூறியுள்ளார். அதே போல் அன்றாடம் கூலித் தொழில் செய்து தமது வறுமையையும், பசிக்கொடுமையையும் போக்கிக் கொண்டிருந்த தொழிலாளிகளின் குடுப்பம் இன்று மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது. இதனால் எமது சமூகம், நாடு முன்னேற முடியாது ஒரு குறுகிய வட்டத்தினுள் சுழன்று கொண்டிருக்கின்றது. இந் நிலைமைகள் அனைத்தும் நிரந்தரமானது அல்ல தற்காலிகமானதே ஆகும் என்பதனைக் கருத்திற் கொண்டு கடலைக் கடக்கும் அரும்பு போன்ற மன உறுதியையும், மலைகளையே துளைத்துச் செல்லும் வலிமையான தோள்களையுமுடைய நாம் அனைவரும் எமது வீடுகளில் இருந்து, எம்மையும் எமது நாட்டு மக்களையும் பாதுகாத்து எமது பழைய பண்பாடு நிறைந்த நாட்டை மீளுருவாக்கம் செய்வோம்.

இக் கொடிய நோய் பரவாமல் தடுப்பதற்கு பின்வரும் சுகாதார விதிமுறைகளைக் பின்பற்ற வேண்டும்.

* தும்மும் போதும், இருமும் போதும் கைக்குட்டை அல்லது திசுப்பேப்பர் அல்லது இவை கிடைக்காத விடத்து, தமது மடித்த முழங்கையின் உட்பக்கத்தினால் மூக்கையும், வாயையும் மறைத்துக் கொள்ள வேண்டும்.
* தொற்றுக்குள்ளானவர்களோடு நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தால் தன்னை சுயமாகவே 14 நாட்களுக்குத் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும்.
* வெளியில் செல்லும்போது முகக்கவசம் அணிந்து செல்வது கட்டாயமாகும்.
* அடிக்கடி கைகளை ஓடும் நீரில் சவர்க்காரம் அல்லது அதற்கென கிடைக்கும் தயாரிப்புக்களைப் பயன்படுத்தி குறைந்தது 20செக்கன்களுக்கு நன்கு தேய்த்துக் கழுவ வேண்டும்.
* தேவையற்ற பொதுப் போக்குவரத்தையும், ஒன்று கூடல்களையும் தவிர்த்தக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ஏனையோரிடமிருந்து குறைந்தத ஒன்று அல்லது இரண்டு மீற்றர் இடைவெளியைப் பேண வேண்டும்.


* அடிக்கடி போதியளவு நீர் அருந்துவதோடு, போசணையுள்ள உணவுகளை உண்ண வேண்டும்.

* காய்ச்சல், இருமல், தடுமல் ஏற்படுமாக இருந்தால் வைத்தியசாலைகளில் அதுக்கென ஒதுக்கப்பட்டுள்ள பிரிவிற்குச் சென்று அங்கு வழங்கப்படும் அறிவுரைகளை பின்பற்ற வேண்டும். அவ்வாறான அறிவுரைகள் உள்ளவர்கள் வெளியே செல்லக்கூடிய சந்தர்ப்பங்களலில் முகக் கவசம் அணிந்தே செல்ல வேண்டும்.

* பொதுவான இடங்களில் உள்ள பொதுப் பயன்பாட்டிற்கான பொருட்களைப் பயன்படுத்தவதனை இயன்றவரை குறைக்க வேண்டும்.

* இலகுவாகத் தொற்றக் கூடிய இந்த நோயிலிருந்து எமது வயதான பெற்றோர்களையும், நாட்பட்ட நோயினால் பாதிக்கின்ற எமது உறவுகளையும், கர்ப்பிணித் தாய்மார்களையும், சிறுவர்களையும் பாதுகாப்போம்.

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக கடந்த 2020 மார்ச் மாதம் 13ம் திகதி அனைத்து அரசு மற்றும் தனியார் பாடசாலைகளும் கல்வி அமைச்சின் அறிவுருத்தல்களின் படி மூடப்பட்டன. அன்று மூடப்பட்டவை இடையில் இரு மாதங்கள் இயங்கி மீண்டும் இன்று அனைத்தும் மூடப்பட்டன. இதனால் பல்லாயிரக் கணக்கான மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இந் நிலையை வைத்து நோக்கும் போது எமது எதிர்கால மாணவ சமுதாயம் கேள்விக் குறியாகி விடுமோ! என்ற அச்சம் தோன்றுகிறது. எனினும் அவற்றை நிவர்த்தி செய்யும் முகமாக அரசாங்கமும், கல்வி அமைச்சும் இணைந்து தொலைக்காட்சி, வானொலி, தொலைபெசி போன்ற இலத்திரனியல் சாதனங்களில் ஓர் நேர அட்டவணைக்கு ஏற்ப மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றால் மிகையாகாது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, மாணவர்களாகிய நாம் வீட்டில் தனிமையாக, பாதுகாப்பாக தங்கியிருந்து எமது கல்வியமைச்சு மற்றும் பாடசாலைகளால் ஏற்பாடு செய்யப்பட்ட கல்வி நடவடிக்கைகளில் கலந்த கொண்டு எமது எதிர்காலம் சிறப்பாக மலர, கல்வியில் முன்னேற முயற்சிப்போமாக.

"நாம் நாமாக மீண்டு எழுவோம்."

ஒருவர் பல முறை கூறி அதன்பின் ஒரு செயலை செய்து முடிப்பது பாண்பாகாது. தானே தமது கடமையைச் செய்ய வேண்டும் என்ற ஔவையாரின் கூற்றிற்கிணங்க தமது சேவையினை, எமது மக்களுக்காகவும், எமது தாய் நாட்டிற்காகவும் தமது உயிரை தியாகம் செய்து செவ்வனே கடமையாற்றிக் கொண்டிருக்கும் வைத்தியர்கள், தாதியர்கள், இராணுவ வீரர்கள், கடற்படை வீரர்கள், காவல்துறை அதிகாரிகள் ஆகியோரின் வேண்டு கோள்களையும் கடைப்பிடித்து மேற்கூறிய அறிகுறிகளைப் பின்பற்றியும் நடந்த கொண்டால் எமது மக்களையும் எம் தாய்நாட்டையும் இக் கொடிய அரக்கன் கொரோனாவிலிருந்து பாதுகாத்து மீண்டும் பழைய நிலையை உருவாக்கலாம். எம் தாய் நாட்டையும் எம் மக்களையும் மீண்டெழ வைப்பதற்கு ஒற்றுமையாக முயற்சித்து, ஆரோக்கியமாக வாழ எத்தனிப்போமாக!

எமது நாட்டின் வருங்காலம் சுபீட்சமாகுவதற்கு நாமும் பங்குதாரர்களாகுவோம்!

இன்பத்திலும் துன்பத்திலும் நாம் நினைவில் கொள்ள வேண்டியது ஒன்றே ஒன்று மட்டும் தான். "இந்தத் தருனம் நிரந்தரமில்லை.... இதுவும் கடந்து போகும்."

கமு/சது/கலைமகள் மகா வித்தியாலயம்
சிரேஷ்ட பிரிவு கட்டுரைப் போட்டியில்
முதலிடம் பெற்றது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இவர்கள்...

நேற்றைய நிம்மதிகளை
தின்றுமுடித்து
திணறுகின்றவர்கள்

மற்றையவர்களின்
மகிழ்சிகளை
வனாத்தரமாக்கியே
வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்..!

கடவுளின் நாமங்களாலே
கண்ணைமூடி
களவு செய்து
காலம் கடத்துபவர்கள்

தன்னிலைத் தோல்விகளை
தவறு என்று சொல்லியே
எண்ணிலாத் திறமையாளர்களை
ஏறி மிதிக்கின்றார்கள்..!

ஏற்றுக் கொள்ளல் இல்லாமேலே
வீழந்து கிடந்த தங்கள் வாழ்க்கையை
துச்சரிப்பு வார்த்தைகளால்
தூக்கி நிமிர்த்துகின்றவர்கள்

மங்கையரின்
மார்பு பற்றிய மதிப்பீடுகளால்
திருமணத்தை மறந்து மறுமணம் பற்றியே
மங்களம் பாடுகின்றார்கள்..!

முகத்திற்கு எதிரேயே
முன்னுரை பற்றிச் சொல்லாமல்
பிடறிக்குப் பின் நின்று
பின்னூட்டல் பற்றி பீத்துகின்றவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேர்மை, நியாயங்களின்றி
சுயநலன்களின் சுவாசங்கள் பற்றி
சுடலையின் மத்தியில்
சுற்றுநிருபம் வெளியிடுகின்றார்கள்..!

நாளைய விடியலை மறந்து
எதிர்காலச் சிறார்களை
எரிக்கும் செயல்கள் பற்றியே
இருக்கையிட்டு அறிக்கையிடுகின்றவர்கள்

மானம் கெட்டுப் போன பின்பும்
மக்கள் மத்தியிலே
பாலியல் பற்றியே
பள்ளிக்கூடம் நடத்துகின்றார்கள்..!

இவர்களின் தலைமைகளின் கீழே
இலட்சக்கணக்கான
இளசுகளின் இலட்சியங்கள்
நாகசாகி நகரங்கள் போல் நாசமாகியது..!

என்னோடு நம்பிக்கை
கொண்டவர்களே
நாளை வாருங்கள்
இவர்களுக்கு
நஞ்சு வைப்போம்..!!

.........................................

– *வி. ஜீவராசா* –

4C, குடியிருப்புமுனை, அன்னமலை-02.
திறந்த பிரிவு கவிதைப் போட்டிப் பிரிவில் முதலிடம் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணையுக் கீறல் (சிறுகதை)

தினசரி ஆறு மணியளவில் மட்டக்களப்பிலிருந்து கொழும்பு செல்வதற்கான பேரூந்து இருப்பதாக தெரிந்து கொண்ட நான் தாராவோடு இணைந்து கொழும்பு சென்று வரத்தயாரானேன். நான் முற்கூட்டி சொன்னபடியே தாராவும் வந்து சேர்ந்தாள். இருவரும் பேருந்து நிலையம் சென்று விசாரித்த போதுதான் தெரிந்து கொண்டோம். அன்றைய தினம் ஆறு மணிக்கு கொழும்பு செல்ல வேண்டிய பேருந்து இரவு பன்னிரெண்டு மணியளவில் தான் புறப்படும் என்று பேருந்து நிலையத்துக்கு எங்களை அழைத்துச் சென்ற முற்சக்கர வண்டி ஓட்டுனர் கூறினார் 'தம்பி இன்று இரவு ஏழு மணியளவில் புகையிரத வண்டி கொழும்பு செல்லவுள்ளது'என்று.

எனக்கும் புகையிரதத்தில் பயணிக்க வேண்டும் என்ற ஆசை நீண்ட நாட்களாக இருப்பதனைத் தெரிந்து கொண்ட தாரா புகையிரத வண்டியிலே நாம் பயணிப்போம் ராஜு என என்னிடம் சொன்னாள். இருவரும் புகையிரதத்தில் ஏறினோம். யாருமற்ற அந்த புகையிரதப் பெட்டியில் நாங்கள் இருவர் மட்டுமே அமர்ந்திருந்தோம். புகையிரதம் புறப்படும் நேரம் நெருங்க நெருங்க நாங்கள் அமர்ந்திருந்த இருக்கையை முற்கூட்டியே பதிவு செய்தவர்கள் மெல்ல மெல்ல வரத்தொடங்கியதும் எங்கள் இருக்கை பறிபோனது.

எங்களுக்கான இருக்கை எங்குள்ளது என்பதை அறியாது நாங்கள் இருவரும் தடுமாறியதைப் பார்த்த ஒரு பெரியவர் எங்களுக்கான இருக்கை உள்ள புகையிரதப்பெட்டியைக் காண்பித்தார். எனக்கு புகையிரதத்தில் கன்னியோடான கன்னிப்பயணம் என்பதனால் பதட்டமாகவே இருந்தது. சினிமாவில் இப்படியான பயணத்தை, எவ்வளவு சுதந்திரமாக பயணித்துக் கொண்டிருப்பதை ரசித்த எனக்கும் அவ்வாறே பயணிக்க வேண்டுமென்ற ஆசைதான். ஆனால் அந்த ஆசைக்கு தாரா இடம் தரவில்லை.

ஜன்னல் ஓரமாய் அமர்ந்து கொண்ட தாரா 'இங்கே பார் ராஜு புகையிரத்தில் திருடர்கள் அதிகம் அங்கே, இங்கே நடந்து திரிய வேண்டாம். அதுவும் நாம் இரவில் பயணிக்கின்றோம். வந்து உட்காரு என கட்டளையிட்டாள்.

தாராவின் பக்கத்தில் நானும் அமர்ந்து கொள்ள, என் கையை அவளின் கையோடு சேர்த்துக் கொண்டு அவளின் கால் தொடையின் மேலே வைத்து 'எப்போவும் நாம் இப்படியே இருக்க வேண்டும் ராஜு' எனச் சொல்லி முடிப்பதற்கு முன்பே ஆசை நிறைந்த ஏக்கத்தோடு பெருமூச்சு விட்டாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் இருவரும் ஒன்றாக எப்போது பயணித்தாலும் சுதந்திரப் பறவைகளாக கவலை மறந்து , இது எங்களுக்கான உலகம், அதில் நாங்கள் இருவர் மட்டுமே இருக்கின்றோம் என்ற நினைவோடு எந்தக் கவலையும் இல்லாமல் சுதந்திரமாகப் பயணிப்போம்.

சிறிது நேரம் புகையிரதம் நகர்ந்ததும் சில்லென்ற காற்று மெல்லென எங்கள் தேகம் தடவியதும் எனக்கு குளிரத் தொடங்கியது. என்னைப் பார்த்து' உனக்குத்தான் குளிர் தாங்கும் சக்தியில்லையே செல்லம்' எனச் சொல்லி அவள் அணிந்திருந்த துப்பட்டாவை எடுத்து என்னைப் போர்த்தி விட்டாள். பாவம் அவள் மட்டும் என்ன குளிர்தாங்குவாளா? இல்லை அந்த துப்பட்டா குளிராமல் தடுக்குமா?. அந்த துப்பட்டாவினால் தாராவையும் சேர்த்து நான் போர்த்தி தாராவின் தோளில் சாய்ந்து கொண்டேன்.

சிறிது நேரம் கழிந்ததும் அவளின் தோள் வலிக்குமென நினைத்து நான் தலையைத் தூக்கியதும் 'அப்படியே படுத்துக்கோ செல்லம்' எனச் சொன்னாள் தாரா. தோள் வலிக்குமே பாப்பா உனக்கு எனச் சொன்ன என்னிடம் 'இல்லடா குட்டி நீ தூங்கு, நீ தூங்குவதே எனக்கு சுகமாய்த்தான்டா இருக்கு' எனச் சொன்னவள் என் முகத்தை ஒரு ஏக்கப் பார்வையில் பார்த்தாள். அவளின் பார்வையின் அர்த்தம் எனக்கும் புரிந்தது.

இரவுப் பயணம்; என்றாலும் நான் அங்குமிங்கும் சுற்றிப் பார்த்தேன் எல்லோருமே தூங்கிக் கொண்டிருந்தார்கள். சட்டென அவளின் கன்னத்தில் ஒரு முத்தம் கொடுத்தேன். சிரித்தபடியே அவளின் மடியில் என் தலையை சாய்த்துப் படுத்துக்கோ எனச் சொன்னாள். அவளின் முகத்தைப் பார்த்தவாறு நானும் என் முகத்தைப் பார்த்தவாறு தாராவும் இருக்கையில் அவளின் இதழ்களால் ஏதோ சொல்லத் துடிப்பதாய் எனக்கு ஒரு உணர்வு வந்தது. என்ன பாப்பா இப்படியே என்னைப் பார்த்துக் கொண்டிருக்கின்றாய் என நான் கேட்டதும் சட்டென என் இதழ்களில் மட்டுமின்றி மொத்த முகத்திலும் முத்தங்களை சத்தமின்றியே கொட்டிக் குவித்தவள் 'என்னதான் நடந்தாலும் எப்பவும் என்னை விட்டுப் போய் விடாதே ராஜு' என பல கவலைகள், ஏக்கங்களை கட்டிக் கொண்டவளாய் சொல்லி முடிப்பதற்கு முன்பே அவளின் கண்ணிலிருந்து ஒரு துளி கண்ணீர் என் கன்னத்தில் விழுந்தது.

ஏன் பாப்பா என்னாச்சு உனக்கு? ஏன் இப்படி சொல்லுறாய், அழாத பாப்பா என சொல்லியபடி நான் எழுந்து கொண்டேன். எதையோ சொல்லி செல்லத்தோட தூக்கத்தைக் கெடுத்திட்டேனாடா ? எனக் கேட்டு அவளின் பிரயாணப் பையில் இருந்து ஒரு புத்தகத்தைப் எடுத்து என்னிடம் தந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாசமான தலைப்பில் இருந்தது. அது **தலைப்பு இல்லாத கதை** என்ற சிறுகதைப் புத்தகம். கதையின் நகர்வு நாங்கள் பயணித்த புகையிரத்தை விட வேகமாக நகர்ந்தது. பல சுவாரசியங்கள் நிறைந்ததாய் இருந்தாலும் ஏதோ ஒரு மூலையில் என் வாழ்க்கையைப் பிரதி பலிப்பதாய் அமைந்திருந்தது சட்டெனப் புத்தகத்தை எழுதிய அந்த காதாசிரியர் யாரென தேடினேன். எந்தப் பக்கத்திலும் காதாசிரியர் பெயரில்லை.

கதையின் சுவாரசியம் என் நெஞ்சை மெல்ல இதமாக தடவியது ,என் தூக்கமும் தூரே போனது கதை முழுக்க எங்கள் காதலே நிரம்பி வழிந்தது. இடைவிடாது நானும் படித்துக் கொண்டிருக்கையில் என்னை வைத்த கண் வாங்காமல் பார்த்து ரசித்துக் கொண்டு தனக்குள்ளே சிரித்தவாறு வந்த தாரா. 'என்ன ராஜு கதையின் சுவாரசியத்தில் என்னையே மறந்துட்டாய் போல' எனக் கேட்டாள்.

என் தேவதையின் பக்கம் திரும்பிப் பார்த்தேன் அவளோ குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தாள். நேரம் அதிகாலை இரண்டு மணியை அண்மித்துக் கொண்டிருந்தது. எனக்கும் சரியான குளிர்தான். என்னைப் பார்த்த அவள் 'ராஜு என்னை இறுக்க கட்டிப் பிடுத்துக்கோ, கொஞ்சம் குளிர் குறையும்' என்றாள். அவளின் சொல்லுக்கிணங்க நானும் அவளை கட்டி அணைத்தபடியே இருவரும் தூங்கிவிட்டோம்.

தூக்கம் விழித்து எழுந்து பார்த்த போது ஆச்சரியமோ ஆச்சரியம். எங்களைத் தவிர வேறு யாரும் அங்கே இல்லை. நாங்கள் இறங்க வேண்டிய இடத்திலே தான் புகையிரதம் நின்று கொண்டிருந்தது. ஆனால் தாராவின் கை, கழுத்தில் இருந்த நகை எதுவும் எங்களிடமில்லை. இரவு நேரத்தில் பயணம் செய்யும் போது நாம் தான் நமது உடைமைகளைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பது அப்போது தான் எங்கள் மூளைக்குப் புலனானது.

அங்கிருந்து என்ன செய்வதென்று அறியாது நாங்கள் செல்ல வேண்டிய இடத்துக்கு கால் நடையாக நடக்கத் தொடங்கினோம். ஆனால் தாரா எந்தக் கவலையும் இல்லாமல் சிரித்த படியே பேசிக்கொண்டு என்னோடு நடக்கத் தொடங்கினாள். 'நகைகள் எல்லாம் களவு போய்விட்டதே உனக்கு கவலையாய் இல்லையா? இப்படி சிரித்துக் கொண்டு வருகின்றேயே' என்று கேட்டு முடிப்பதற்கு முன்பே. இது உனக்குத் தான் முதல் முறை எனக்கு பழகி விட்டது. ஒவ்வொரு முறையும் செலவுக்காக நீ பணம் இல்லை என்று சொன்ன போதெல்லாம் என் நகைகளை அடகு வைத்துதான் உனக்கு அனுப்பிக் கொண்டிருந்தேன்டா, நான் அணிந்து வந்தது ஒன்றும் தங்கமில்லை, திருடிப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனவன் நிலையை நினைக்கும் போது சிரிப்புத்தான்டா வருது எனச் சொன்னதும் எனக்கும் சிரிப்பு அடக்க முடியாமல் குபீரெனப் பாய்ந்தாலும் அவளை நினைக்கும் போது மனதுக்கு வேதனையாகவே இருந்தது.

நடந்து போகும் போது 'இரவு படிச்சு வந்தாயே கதை எப்படிடா இருக்கு' எனக் கேட்டாள். 'ஆமாம் தாரா அந்தக் கதை யார் எழுதியது? நம்ம வாழ்க்கையை அப்படியே எழுதிய மாதிரியே இருக்கு' என்ற என்னிடம் 'நம்ம கதை நமக்கு மட்டும் தானே தெரியும் வேறு யாரும் அதைஎழுத வருவார்களா? எனக் கேட்டாள். நினைத்தேன் அதை நீ தான் எழுதியிருக்க வேண்டுமென்று. கிள்ளாடிதான் நீ, ஆமாம் கதை முடியாமல் தொடரும் எனப் போட்டிருக்கின்றாயே ஏன்? என்ற என் கேள்விக்கு ' நடந்தவற்றை நான் எழுதிவிட்டேன் நடக்கப் போவதை நீ தான் எழுதி முடிக்க வேண்டும்,'என்றாள் தாரா.

சிரித்தபடியே எழுதிட்டாப் போச்சி என சொல்லிக் கொண்டே நடக்க ஆரம்பித்தோம். நாங்கள் செல்ல வேண்டிய இடமும் வந்தது. இருவரும் சற்றே ஓய்வெடுக்கலாம் என நினைத்து தூங்க தயாரானதும் ' எனக்குத் தலை சுற்றுகின்றது ராஜ்' எனச் சொல்லி முடிப்பதற்கு முன்பே மயக்கம் போட்டுக் கீழே விழுந்தாள் தாரா.

அவசரமாக அவளை வைத்தியசாலைக்கு அழைத்து சென்றேன்.சிறிது நேரத்தின் பின் வெளியே வந்த தாரா கண்களைக் சிமிட்டியபடி 'நீ அப்பாவாகப் போகிறாய் 'என்றாள். எனக்கு அளவில்லாச் சந்தோசம். அவளைக் கட்டிப் பிடித்து கன்னத்தில் முத்தமிட்டேன்.

காலை நேரம் என்பதனால் எனது படுக்கையறைக்கு தேனீர் கொண்டுவந்த என் அம்மா தாரா என நினைத்து தலையணையைக் கட்டியணைத்து நான் முத்தம் கொடுப்பதைப் பார்த்து விட்டு காலாகாலத்தோட கல்யாணத்தைக் கட்டிக்கொள்ளு என்றால் கேட்டால் தானே. முதலில உனக்கு ஒரு பொண்ணைப் பார்த்து கல்யாணத்தைக் கட்டி வைக்க வேண்டும் எனச் சொல்லி வெளியேறிய போது தான் உணர்ந்து கொண்டேன் காட்சிகள் அனைத்தும் கனவு என்று.


– வை .கே. ராஜ் –

15/40, நாவிதன்வெளி, கல்முனை.
திறந்த பிரிவு சிறுகதை போட்டிப் பிரிவில் முதலிடம் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன ஒற்றுமை



முடிந்த யுத்தங்கள் மறந்து
மூடிய மனங்கள் திறந்து
மூவின மக்களும் ஒன்றிணைந்து
முகமலர்ச்சியோடு வாழும் தருணம் இது

விகாரையில் வழிபட்டு
கோயிலில் கும்பிட்டு
மஸ்ஜிதில் தொழுதிட்டு
தேவாலயத்தில் வணங்கிவிட்டு
மத அனுகூஷ்டானங்களை மரவாமல் செய்திடும்
மகத்தான மண் இது

பாதையில் பெரஹரா சென்றாலும்
ஊர் கூடி தேர் இழுத்தாலும்
நபி பிறந்த தின நடைபவணி என்றாலும்
நத்தார் பாப்பாவின் நடனமென்றாலும்
மத வேறுபாடின்றி மதிக்கும்
மனிதகுல மக்கள் வாழும் மாணிக்க
மண் இது

பசி தீர்க்கும் பாற்சோறும்
ருசி தரும் இட்லியும் சாம்பாறும்
இனிப்பூட்டும் வட்டிலப்பமும்
இன்பச் சுவை தரும் கேக்கும்
பண்டிகைகளில் பரிமாறிப் பகிர்ந்திடும்
பண்பான நாடு இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் உடம்பில் ஓடும் உதிரத்திலும்
நயணத்தில் வரும் கண்ணீரிலும்
நாம் நாளெல்லாம் தேடினாலும்
நாம் காணமுடியாத சாதி வித்தியாசம்

நான்கு மத வழிகாட்டலில்
நல்ல மனிதர்களை உருவாக்கி
நாட்டிற்கு நன்மை செய்யும்
நாவிதன்வெளி இப்பகுதியில்

மத வெறி மறந்து
மனக்கிலேசங்கள் திறந்து
மனிதத்துவப் பண்புகளால்
மண் சிறக்கப் பணிகள் செய்வோம்



- மஹ்றூப் பாத்திமா ஜனா -

கமு/சது அஸ்-சிறாஜ் மகா வித்தியாலயம்
நாவிதன்வெளி
கனிஷ்ட பிரவு கவிதை பாடல் போட்டிப் பிரிவில்
முதலிடம் பெற்றது.

" உங்கள் திறமை உங்களுக்கான கடவுளின் பரிசு
அதை வைத்து நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பது
கடவுளுக்கான உங்களின் பரிசு... "
- லியோனார்டோ பஸ்காக்லியா -




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொறிக்கல்முனை திருச்சிலுவை திருத்தலம்

- கலாபூசணம் ஜீ. அன்ரனி -

அம்பாறை மாவட்டத்தில் அமைந்திருக்கின்ற ஒரு சிறிய கிராமமாக சொறிக்கல்முனை திகழ்கின்றது. இக் கிராமம் மிகவும் பாரம்பரிய வரலாற்றுப் பின்னனியை கொண்டுள்ளது. இக் கிராமத்தில் வசிக்கும் மக்கள் அனைவரும் கத்தோலிக்க சமயத்தைத் தழுவியவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது. இக்கிராமத்துக்கு சுமார் 360 ஆண்டுகளுக்கு முன் கத்தோலிக்க மதம் ஆரம்பிக்கப்பட்டதாக சரித்திர சான்றுகள் கூறகின்றன. சாந்தக்குருஸ்(Holy Cross) என்று அழைக்கப்படும் இத்தேவாலயமே இலங்கையின் முதலாவது சாந்தக்குருஸ்(Holy Cross) தேவாலயம் என்ற பெருமையை அடைகிறது. யேசுநாதர் மரித்த சிலுவை மரத்தின் ஒரு சிறு துண்டு ரோமாபுரியிலிருந்து கோவைக்கு கொண்டுவரப்பட்டு, பேரருப் பெருந்தகை வெற்றிக்கனி ஆயர் அவர்களால் கோவையிலிருந்து பெறப்பட்டு இவ் ஆலையத்தில் வைக்கப்பட்டு பக்தர்களால் வணங்கப்படுகின்றன. ஒவ்வொரு வருடமும் புரட்டாசி 14ம் திகதி இவ் ஆலயத்திருவிழாவின் போது ஆலயத்திற்கு வெளியே எடுக்கப்பட்டு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு பக்தர்களுக்கு வழிபட சந்தர்ப்பம் கொடுக்கப்படுகின்றது. இத்திருவிழாவிற்கு இலங்கை நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பக்தர்கள் வருகை தருவது குறிப்பிடத்தக்கது.

முத்திப்பேறு பெற்ற வண. யோசப்வாஸ் 1710ல் வருகை தந்து தமது திருப்பாதத்தை பதித்து திருப்பலி ஒப்புக்கொடுத்து இம் மண்ணிற்கு கிடைத்த மாபெரும் பாக்கியம் என்று வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொன்சால்வாஸ் சுவாமிகள் 18ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஒரு குடிசை வடிவில் ஆரம்பத்தில் ஆலையத்தை அமைத்தார் என்று வரலாறு கூறுகின்றது. மட்டு நகரில் பணியாற்றிய கோவையை சேர்ந்த குருக்களான அருப். திரு. அன்ரோனியோ, அருப். திரு.றப்பாயேல், அருப். திரு.யோக்கியம் அடிகளார் ஆகியோரின் அனுசரனையுடன் "பாஸ்கல்" முதலியார் அவர்களால் 1896ல் நிரந்தர ஆலயம் அமைக்கப்பட்டது. 1896ல் ஆயர் பேரருப். திரு.கஸரன் றொபிஷே(யே.ச) அவர்களால் இவ்வாலயம் தகிப்பங்காப் பிரகடனப்படுத்தப்பட்டது. இப்பங்கின் முற்பங்குக் குருவாக அருப்பணி யோசப்மேரி (யே.ச) அடிகளார் நியமனம் பெற்றார்.

இவ்வாலயத்தின் விஷேட அம்சமானது இவ்வாலயத்தில் வைக்கப்பட்டிருக்கும் சிலுவையில் மரித்த யேசுநாதரின் திரு உடல் கல்லறை ஆண்டவர் என்று பக்தர்களால் அழைக்கப்படுகின்றது. இச் சொரூபம் இந்தியாவில் அமைந்துள்ள தூத்துக்குடி எனும் இடத்திலிரந்து கொண்டு வரப்பட்டதாகும். புதுமைகள் பல செய்யும் இச் சொரூபத்திற்கு தொடர்ந்து வணக்கம் செலுத்துவது குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு வருடமும் பெரிய வெள்ளிக்கிழமை அன்று நடைபெறும் "பாஸ்கா" நிகழ்வில் இச் சொரூபம் எடுக்கப்பட்டு சிலுவையில் அறைந்து இறக்கச் செய்யப்பட்டு பிண்பு கீழே இறக்கப்பட்டு பக்தர்களின் வழிபாட்டிற்கு வைக்கப்படுகின்றது. இப் புனிதமான நிகழ்வில் நாட்டின் பல இடங்களிலுமிருந்து பக்தர்கள் திரள்வது குறிப்பிடத்தக்கது. பக்தர்களின் வேண்டுதல்கள் யாவும் கேட்கப்படுவதால் தொடர்ந்து புதுமைகள் புரியும் இக் கல்லறை ஆண்டவரின் அருளைப் பெறுவதற்கு இக்காலத்திற்கு மக்கள் திருவிழாக் காலங்களில் மாத்திரமல்ல எல்லா நாட்களிலும் வருகை தந்து இக் கல்லறை ஆண்டவரை வழிபடுவது குறிப்பிடத்தக்கது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத் துளிகள்

- வணங்கத் தக்கவர்கள் - தாயும், தந்தையும்
- வந்தால் போகாது - புகழ், பழி
- போனால் வராது - மானம், உயிர்
- தானாக வருவது - இளமை, முதுமை
- நம்முடன் வருவது - பாவம், புண்ணியம்
- அடக்க முடியாது - ஆசை, துக்கம்
- தவிர்க்க முடியாதது - பசி, தாகம்
- நம்மால் பிரிக்க முடியாதது - பந்தம், பாசம்
- அழிவைத் தருவது - பொறாமை, கோபம்
- எல்லோருக்கும் சமமானது - பிறப்பு, இறப்பு
- கடைத்தேற வழி - உண்மையும், உழைப்பும்
- ஒருவன் கெடுவது - பொய்ச்சாட்சி, செய்நன்றி -மறப்பது
- வருவதும் போவதும் - இன்பம், துன்பம்
- மிக மிக நல்ல நாள் - இன்று
- மிகப் பெரிய வெகுமதி - மன்னிப்பு
- மிகவும் வேண்டாதது - வெறுப்பு
- மிகப் பெரிய தேவை - சமயோஜித புத்தி
- மிகக் கொடிய நோய் - பேராசை
- மிகவும் சுலபமானது - குற்றம் காணல்
- கீழ்த்தரமான விஷயம் - பொறாமை
- நம்பக்கூடாதது - வதந்தி
- ஆபத்தை விழைவிப்பது - அதீத பேச்சு
- செய்யக்கூடாதது - தவறுகள்
- செய்ய வேண்டியது - உதவி
- விலக்க வேண்டியது - விவாதம்
- உயர்விற்கு வழி - உழைப்பு
- நழுவிவிடக் கூடாது - வாய்ப்பு

சுவேந்திரன் கம்சன்

தரம் - 3

f K /சது/ விவேகானந்தா மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேசத்தை கட்டியெழுப்பும் கலை இலக்கியம்

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதற்கிணங்க உலகம் எப்போது ஓரினமாக பார்க்கப்படுகின்றதோ அப்பொழுதுதான் சமாதானம் நிலவி மக்கள் அமைதியாக வாழும் காலம் உருவாகும். இன்றைய உலகம் மனித நாகரீகத்தின் வளர்ச்சியினூடாக சிறந்த ஒரு அடைவைக் கண்டுள்ளது. ஆரம்பத்தில் காட்டுமிராண்டித்தனமாக வாழ்ந்த மனிதன் அமைதியான, ஒழுக்கமான, புரிந்துணர்வு மிக்க சிறந்த மனிதனாக மாற இலக்கியமும் கலையும் மிகவும் முக்கியமான விடயப் பொருளாக அமைந்துள்ளது.

உலக வரலாற்றில் மனிதன் நாகரீகம் அடையும் முன்னர் ஓரினமாகவே வாழ்ந்துள்ளான். அவனிடம் சந்தோசமும், ஒற்றுமையுமே காணப்பட்டது. ஆயினும் பின்னர் ஏற்பட்ட அறிவு வளர்ச்சி, நாடுகாண் பயணங்களின் தொடர்ச்சி, கைத்தொழில் புரட்சியினால் மனித இனம் பிரிவுபடத் தொடங்கியது. உதாரணமாக இந்திய சுதந்திரப் போராட்டமானது அன்னியர்களுக்கு எதிராக நடாத்தப்பட்ட போது எல்லா இன மக்களும் ஒன்றுபட்டே வெள்ளையர்களுக்கு எதிராக நாட்டைக்காக்க செயற்பட்டனர். ஆயினும் பின்னர் இந்தியாவில் இருந்து பாகிஸ்தானும், பாகிஸ்தானிலிருந்து பங்காளதேசும் பிரிந்து சென்றமைக்கு இனப்புரிந்துணர்வின்மையே காரணமாயிற்று.

ஒரு நாட்டிற்குள் அல்லது ஒரு பிராந்தியத்திற்குள் வாழுகின்றவர்கள், தமது பிரச்சினைகளையும் எண்ணங்களையும் உணர்வுகளையும் பரஸ்பரம் சரிவர தெளிவுபடுத்திக்கொள்ள முடியாத நிலையில் சமூகங்கள் தமக்கிடையே முறண்பட்டு நிற்கின்றன என்பதை வெளிக்காட்டியுள்ளன. ஓர் நாட்டிற்குள்ளேயே தாய் பிள்ளையாக பழகிய இனங்கள் அரசியல்வாதியின் பிழையான செயற்பாடுகளினால் முறண்பட்டு ஒருவரையொருவர் பழிதீர்க்கும் இனங்களாக மாறியுள்ளன. அண்மையில் மியன்மாரிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட ரோகிங்கியோ இன முஸ்லிம்கள் மீதான ஒடுக்குமுறையை எடுத்துக்காட்டலாம்.

2ஆம் உலக மகாயுத்தத்தை நோக்கும் போது ஜேர்மனியில் ஹிட்லரினால் யூத இனத்திற்கு எதிராக நடாத்தப்பட்ட கொடூர பழிவாங்கல்களினால் சுமார் இருபது இலட்சத்திற்கு மேற்பட்ட யூத இன அப்பாவி மக்கள் கொல்லப்பட்டும், இடம்பெயர்ந்தும், அநாதைகளாக்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று உலக நாடுகள் பலவற்றில் இனப் புரிந்துணர்வின்மையே அதிகம் காணப்படுகின்றது. ஆளுவோர் தம்மை பெரும்பான்மை இனமாக கருதுவதாலும், ஏனைய இன மக்கள் அச்சத்தாலும் இத்தகைய அம்சம் இடம்பெறுகின்றது. கனடா, சுவிற்சர்லாந்து போன்ற வளர்ந்த நாடுகளில் இதனை காண முடியாத போதும் ஆசியா, ஆபிரிக்கா போன்ற நாடுகளில் புரிந்துணர்வின்மை பெரும்பான்மையாக காணப்படுகின்றது. இதனாலே இனமுறண்பாடுகள் தோற்றம் பெறுகின்றன.

இலங்கையில் வாழும் இனக்குழுமங்களான சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஆகிய மூன்று பிரதான இனங்களுக்கிடையிலான சமூக உறவுகள் வளர்த்தெடுக்கப்படவில்லை. காலப்போக்கில் புரிந்துணர்வில் குறைபாடிருந்தமையினால் தமிழ், சிங்கள இனங்களை மையப்படுத்தி இனங்களுக்கு இடையிலான முறண்பாடு மெல்ல மெல்ல வளர்ச்சியடைந்தது. இவ் இன முறண்பாட்டின் உச்சம் உரிமைப் போராட்டமாக மாறி, இலங்கையை கறைபடிந்த இரத்தக் களமாக மாற்றியிருந்தது. சுமார் மூன்று தசாப்த காலம் இலங்கையர் பல்வேறு இன்னல்களை அனுபவிக்கவும் அது காரணமாகியது. அப்போராட்டத்தின் முடிவு கசப்பான அனுபவத்தை தந்ததோடு, மனிதபிமானம் தொடர்பில் பல கேள்விகளையும் எழுப்பியுள்ளது. இந்தச் சூழல் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதன் அவசியத்தை வலியுறுத்தி நிற்கின்றது. காலப்போக்கில் இவ்விரண்டு இனங்களுக்கிடையிலான உறவின் அவசியம் உணரப்பட்டதெனினும் அதனை வளர்த்தெடுப்பதற்கு காத்திரமாக முயற்சிகள் எமவும் மேற்கொள்ளப்பட்டதாக தெரியவில்லை. ஆயினும் இலக்கியமும் கலையும் இனங்களுக்கு இடையிலான புரிந்துணர்வை ஏற்படுத்தும் மிகவும் முக்கியமான ஒரு அம்சமாகும்.



ஒரு மனிதனை வெளிக்காட்டும் ஊடகங்களாக கலையும் இலக்கியமும் காணப்படுகின்றன. இவைகள் மனிதனூடாக சிறந்த தேசத்தை கட்டியெழுப்புவதில் முதன்மை பெறுகின்றன. காரணம் ஒரு தேசத்தின் வரலாற்றை அங்குள்ள இலக்கியம் மற்றும் கலைகளினூடாகவே அறிய முடியும். அந்த வகையில் அமைதியான, ஒழுக்கமான, முழுமையான சிறந்த மனிதனை இலக்கியமும் கலையும் உருவாக்குகின்றன. அதன் மூலம் மனிதனால் தேசம் கட்டியெழுப்பப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசத்தை கட்டியெழுப்புதல் என்பது ஒரு தேசத்தின் பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், உட்கட்டமைப்பு, மனித வள அபிவிருத்தி மூலம் தன்னிறைவடைதலாகும். ஒரு நாட்டிலுள்ள பாடசாலைகள், கலாசாலைகள், பல்கலைக்கழகங்கள் உட்பட அனைத்து கல்வி நிறுவனங்களினதும் பிரதான பணி நல்ல மனிதர்களை உருவாக்குவதாகும். அதன் இலக்காக ஆன்மீகம், பண்பாடு, ஒழுக்கம், அறிவு, ஆரோக்கியம் நிறைந்த மனிதர்களை உருவாக்குவதாக இருத்தல் வேண்டும். இதன் மூலம் புரிந்துணர்வு மிக்க சிறந்த தேசத்தை கட்டியெழுப்ப முடியும்.

மனிதனுடைய செயற்பாடுகளுக்கு மையமாக பயன்பட்டது ஆலயங்கள். ஆலயங்களை இன்றைய பல்கலைக்கழகங்களோடு ஒப்பிடலாம். அந்த வகையில் இறைவழிபாடு முதன்மையிடம் பெற்றிருந்தாலும் ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் பேணிப் பாதுகாத்து வந்தது எமது ஆலயங்களே இதனால்தான் அன்றைய மன்னர்கள் ஒவ்வொரு ஊரிலும் வானளாவிய கோபுரங்களை அமைத்து இறைவனுக்கு ஆலயங்களை பிறப்பித்தார்கள். இறை வழிபாட்டில் பூசைகள் தவிர, வேதம் ஓதுதல், தேவாரம் ஓதுதல், இசை, நடனம் போன்ற நாளின கலைகளை வளர்த்தல், சிற்பம், சித்திரம் வரைதல் போன்ற அனைத்தையும் மையமாக வைத்து வளர்ந்தது இது போன்ற ஆலயங்களில்தான். இன்று உலக மக்கள் அனைவரும் பார்த்து வியந்து பாராட்டும் வகையில் இந்தியப் பாரம்பரிய பண்பாட்டைப் பறைசாற்றி வரும் சிற்பக் கலைக்கு எத்தனை ஆலயங்களை குறிப்பிடலாம்.

ஓர் உயர்ந்த இலக்குடன் எழுதப்படுவதுதான் இலக்கியம். இலக்கு+இயம்= இலக்கியம் ஆகும். அதாவது இலக்கு, நோக்கம், கொள்கை, குறிக்கோள், இலச்சியம் எனும் மொழிக் கருத்துக்களையும் இயம் - இயம்புவது, கூறுவது, வெளிப்படுத்தவது எனும் மொழிக் கருத்துக்களையும் குறித்து நிற்கின்றன. அறிந்த கருத்துக்களையும் உணர்ந்த உணர்ச்சிகளையும் பிறருக்கு எடுத்துக்கூற உதவுகின்ற ஒரு கருவி மொழியாகும். அம்மொழியை பேசுகின்ற மக்களது கொள்கைகளையும் குறிக்கோள்களையும் எடுத்தியம்புவது இலக்கியமாகும். அந்த வகையில் இனங்களுக்கிடையே மனித வாழ்வை நெறிப்படுத்தவதுமான வாழ்வியல் அறங்களை எடுத்துக்கூறும் இலக்கியங்கள் பல உள்ளன. திருக்குறள், பகவத்கீதை, நாலடியார், சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்கள் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

இலக்கியமானது காலத்தின் பதிவுகளை காலத்தின் வெளியில் சுமந்து செல்லும் வாகனமாகும். பல்லின மக்களும் பல வகையான இலக்கியங்களை யாத்துள்ளனர். இதனை மக்கள் கற்கும் போது புரிந்தணர்வுமிக்க, அமைதியான, ஒழுக்கமான சிறந்த சமூகத்தை கட்டியெழுப்ப முடியும். சிலப்பதிகாரம் எனும் இலக்கியம் வடநூலாக காணப்பட்டாலும் அதில் கண்ணகியின் வாழ்க்கை எடுத்தக்காட்டப்படுகின்றது. இராமாயணம், மஹாபாரதம் ஆகியன பல்லின மக்களாலும் கற்கப்படுகின்றது. திருக்குறள் எனும் இலக்கியம் பொதுவான நூலாக இருப்பதனால் யாவரும் பயன்பெற முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டப்படுகின்றது. இராமாயணம், மஹாபாரதம் ஆகியன பல்லின மக்களாலும் கற்கப்படுகின்றன. திருக்குறள் எனும் இலக்கியம் பொதுவான நூலாக இருப்பதனால் யாவரும் பயன்பெற முடியும்.

இவ்வாறு இலக்கியங்கள், விழுமியங்கள் மூலம் இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தி சிறந்த தேசத்தை கட்டியெழுப்புகின்றது. மநுதர்ம சாஸ்திரம் நீதியைப் பற்றி போதிக்கின்றது. மஹாபாரதம் ஒற்றுமையை பற்றி போதிக்கின்றது. "அல்லன செய்தோருக்கு அறம் கூற்றாகும்" என்கிறது அரிச்சந்திர புராணம் பார்த்ததன் பிறகே மகாத்மாகாந்தி உண்மையை உரக்கக் கூறினார். இலக்கியமானது ஒருமனித சமுதாயத்தின் போக்கு, மனித சமுதாயத்தின் இலக்கு, ஒரு மனித சமுதாயத்தின் நிலைக்கண்ணாடி என புரிந்துணர்வுமிக்க தேசத்தை கட்டியெழுப்புவதில் வகிபங்கு வகிக்கின்றது.

இலக்கியமானது குறித்ததொரு சமுதாயத்தின் நிலைக்கண்ணாடியாகவே தொழிற்படுகின்றது. நாம் நிலைக்கண்ணாடி முன் நிற்கும் போது எமது அங்க அசைவுகளையெல்லாம் அக்கண்ணாடி அப்படியே காட்டுகின்றதைப் போல ஒரு சமுதாய மக்களின் வாழ்க்கை முறைகளை அவர்களின் போக்கை, இலக்கை, இலட்சியங்களை, அப்படியே இலக்கியங்கள் படம்பிடித்து காட்டுகின்றன. சங்க காலம் முதல் இக்காலம் வரை இலக்கியமானது மக்களின் வாழ்க்கை முறைகளையும் அதன் வளர்ச்சிக் கட்டங்களையும் பிரதிபலிப்பனவாகவே இருந்து வந்துள்ளதை நாம் நன்கு அவதானிக்க முடிகிறது.

புரிந்துணர்வு மிக்க சிறந்த மனிதர்களை கொண்ட தேசத்தை கட்டியெழுப்புவதில் கலைகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன. கற்கால மனிதன் ஓவியம், இசை மூலம் தனது கலைப் பயணத்தைத் தொடங்கினான். பின்னர் சிற்பங்கள், செதுக்கங்கள் தொடங்கியதும் அவனது ஒழுக்கம், மனிதத்துவம் என்பன வளர்ச்சியடைந்து விட்டது. எகிப்திய நாகரீகம், மொஹஞ்சதாரோ ஹரப்பா நாகரீகம், மொசபத்தேமியா நாகரீகம் என்பன சிறந்த கட்டமைப்பைக் கொண்டிருந்தமைக்குச் சான்றாக சிற்பக்கலை சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. அஜந்தா சிலை ஓவியம், எல்லோரா குகை ஓவியம் என்பன கலையின் தன்மையை எடுத்துக் காட்டுகின்றன.

கலை என்பது ஒரு வெளிப்பாடு, கலைஞன் தன் உள் உணர்வை வெளிக்கொணரும் கருவி. தனது மனச் சுதந்திரத்தை, தனது ரசிகர்களுடன் தன் எண்ண அலைகளை பகிர்ந்து கொள்ளும் யுக்தி, தன் மனக்கண்ணில் காணும் காட்சியை மற்றவரை பார்க்கச் செய்யும் மார்க்கம் அதுதான் கலை. ஒவ்வொரு மனிதனுள்ளும் ஒரு கலைஞன் இருக்கின்றான், உறங்கிக் கொண்டு அன்றாட வாழ்வில் பூட்டிக்கிடக்கும் இந்த உணர்வு, சுதந்திரத்திற்கு எங்கும் எப்போதும் ஏங்கிக் கொண்டே தவிக்கின்றது. அழகியல் பற்றிய வகையீட்டில் "ஆயகலைகள் அறுபத்தி நான்கு" என கூறப்பட்ட வகைப்பாடானது மாற்றப்பட்டு இன்று நூற்றுக்கு மேற்பட்டவையாக வகையீடு செய்யப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆயகலைகள் அறுபத்தி நான்கு" என கூறப்பட்ட வகைப்பாடானது மாற்றப்பட்டு இன்று நூற்றுக்கு மேற்பட்டவையாக வகையீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான மாற்றத்தின் அதிகரிப்பினால் மனித மனம் ஆறுதல் அடைந்து புரிந்துணர்வு ஏற்படுகின்றது என உளவியளாலர் கூறுகின்றார். ஏனெனில், ஒவ்வொரு மனிதனும் மனச்சுமையால் கட்டுண்டு கிடக்கின்றான். இந்நிலையில் கலைகளின் வகையீட்டின் அதிகரிப்பானது மனச்சுமைகளை குறைப்பதற்கு ஏற்ற களமாக அமைகின்றது என்ற கருத்தினை சிக்மன் புரொய்ட் என்ற உளவியலாலரும் ஆதரித்துச் சொல்கின்றார். இக் கருத்துக்களின் முக்கிய செல்வாக்கானது அரிஸ்டோடிலின் உளவியல் அடிப்படையான "கதாஸிஸ்" என்ற கொள்கையிலிருந்து உருவாக்கம் பெற்றிருக்கின்றது.

ஒரு படைப்பாளியை பொறுத்தவரையில் அதாவது கலைஞ்ஞனைப் பொறுத்த வகையில் எப்பொழுதும் அவரது மனநிலையினை பொறுத்தே படைப்புக்கள் வெளிப்படும். பெரும்பாலான கலைஞர்கள் தமது மனங்களில் ஏற்படுகின்ற பாதிப்புக்களை குறைத்துக் கொள்வத்றகாக கவிதை, பாட்டு, நடனம், ஓவியம் என்று பல்வேறுபட்ட கலைகளை வெளிப்படுத்துகின்றனர். ஒவ்வொரு காலங்களின் தேவைகள் நன்கு உணரப்பட்டு தேவைகளுக்கு ஏற்றாற்போல் கலைஞர்கள் கலைகளை படைக்கின்றனர். உதாரணமாக மாக்சியனுடைய காலத்தில் எழுந்த கலைகள் எல்லாம் அன்றைய பொருளாதாரப் பிரச்சினைகளையும் வகுப்புப் போராட்டங்களின் இயல்பினையும் பிரதிபலிப்தாகவே காணப்பட்டன.

தமிழர் வரலாற்றை எடுத்து நோக்கினால் கலைகள் மூலம் சிறந்த மனிதர்களைக் கொண்ட தேசத்தை கட்டியெழுப்புவதில் தஞ்சைப் பெருங் கோயில், மதுரை மீனாட்சியம்மன் ஆலயம் போன்றவற்றின் சிற்பங்களை எடுத்துக்காட்டலாம். அதுமட்டுமன்றி எமது ஈழத்து மரபுகளில் இன்னும் கூட தெருக்கூத்துக்கள் என்பவை மக்களுடைய பிரச்சினைகளை வெளியில் கொண்டு வருவதற்காகத் தெருவில் கலைஞர்கள் குழுவாக ஒன்று சேர்ந்து பாடல்கள் மூலமோ அல்லது கலைஞர்கள் மூலமோ குதித்துக் குதித்து ஆடிக் கருத்தினை வெளிப்படுத்தகின்றனர். கதிர்காம பெரஹராவினை எடுத்து நோக்கினால் இலங்கையில் பல்லின மக்களும் பார்த்து ரசிக்கும் ஓர் கலையாக காணப்படுகின்றது. அதில் இடம்பெறும் மயிலாட்டம், ஒயிலாட்டம், பரதம், குடுமிக்காவடி ஆகியன தமிழ், சிங்கள மக்களால் பின்பற்றப்படுவதனைக் காணலாம்.

எனவே சங்க காலம் தொடக்கம் தற்காலம் வரையான இலக்கியங்கள் மற்றும் கலை பாரம்பரிய வளர்ச்சியினூடாக புரிந்துணர்வு மிக்க தேசத்தை கட்டியெழுப்புவதில் பாரிய பங்கு வகித்துள்ளதை காணலாம்.

முரளிதரன் டுஜிதா


கமு/சது/விவேகானந்தா மகா வித்தியாலயம்
கனிஷ்ட பிரிவு கட்டுரைப் போட்டியில் முதலிடம் பெற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாவும் கொண்டு வந்த பாரம்பரிய பழக்க வழக்கமும்

பண்பாடுகள் பேணிகாக்கும் நாடுகள் வரிசையில் எனது நாடும் ஒன்றாகும். பண்டைக்காலம் முதல் வழக்குகள் வழக்காறுகள் காணப்படும் இடமாக இலங்கைத் திருநாடு விளங்குகின்றது. தொடர்ச்சியாக இடம் பெற்று வரும் சனத்தொகை அதிகரிப்பு இதன் விளைவான நகரமாக்கம், நாகரீகத்தின் வளர்ச்சியில் நகராக மாறும் கிராமங்கள், தொழில் மற்றும் மருத்துவம், கல்வி என தமது தேவைகளுக்காக நகர வாழ்வைத்தேடி மக்கள் செல்வதால் அவற்றிற்கு பழக்கப்பட்டு நகரவாசியாகவே வாழுகின்றனர். இதனால் கிராமிய பண்பாடு கலாசாரம் என்பன மறக்கடிக்கப்பட்டு விட்டது. அதிகாலை வாசல் பெருக்கும் போது சாணம் தெளித்தும். மஞ்சள் நீர் தெளித்தும், பெருக்குவதும் வழக்கமாக இருந்தது. இதேபோல் வாசலில் வேப்பிலை, மாவிலை கட்டுதல், துளசி நீர் அருந்துதல், தலைக்கு எண்ணை தேய்த்து குளித்தல், உடைகளை சுடுநீரில் கழுவுதல் என சிறந்த பழக்க வழக்கங்கள் இருந்தன. மரண வீடுகளுக்கு சென்று வந்தால் மஞ்சள் நீர் தெளித்து ஆடைகளை மாற்றி உள்நுழைவது, பாதணிகளை வீட்டின் வெளிப்புறமாக போடுவது என பல்வேறு அம்சங்களை அன்றைய எமது மூதாதையர் சமூகம் பின்பற்றி வந்தது. ஆனால் இன்று தொடர் மாடிகளிலும் நகர்ப்புறங்களிலும் வாழ்வதால் இவற்றுக்கெல்லாம் நேரம் இல்லாது இயந்திரமான வாழ்க்கை வாழ்வதனால் எல்லாமே தலைகீழாக மாறிவிட்டது. இதனால் நோய்களுக்கு ஆளாகக் கூடிய தன்மை இன்றைய சமூகத்தில் தலைதூக்கியுள்ளது.



கைகூப்பி வணக்கம் சொல்வது எமது நாட்டு பண்பாடாகும். இது வெளிநாட்டு பயணங்கள் மட்டும் வெளிநாட்டவர் உடனான தொடர்புகள் மூலம் கைகுலுக்கி கட்டித்தழுவும் முறை வழக்கத்தில் வந்தது இதனால் எமது பாரம்பரிய முறை வழிக்கொழுந்து போனது. வெளியில் சென்று வந்தால் கை கால் கழுவி உடைமாற்றி விட்டுத்தான் வீட்டில் நுழைவார்கள். இன்று பரபரப்பான உலகில் உடுத்த உடையுடன் உண்டுவிட்டு ஓடித் திரியும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனை இன்றைய அபாயகரமான கொரோனா நிலை எமக்கு சிறந்த ஒரு ஆசானாக பாடம் புகட்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைய காலத்தில் மூலிகை தேநீர் அருந்துவது, மூலிகை சாதம் சமைப்பது. இயற்கை உணவுகளை அதிகம் உண்பது என்பன வழக்கமான பழக்கமாக இருந்தது. ஆனால் நாகரீகம் என்ற போர்வையில் இவைகள் மறந்து போத்தலில் அடைக்கப்பட்ட இரசாயனக் கலவைகளை பருகுகின்ற நாகரீகம் ஆரம்பமாகியது. ஆனால் தற்போது இந்தக் கொரோனா பாரம்பரிய பழக்கத்திற்கு கொண்டு சென்றுள்ளது. மூன்று வேளையும் இஞ்சி, மஞ்சள், மிளகு என மூலிகைகள் கலந்த நீர் அருந்த செய்துள்ளது. இவற்றை எமது இன்றய இளம் சமுதாயத்திற்கு கற்றுக்கொடுக்கும் சிறந்த சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித்தந்துள்ளது.

எனவே எமது மறந்த பாரம்பரயங்களை மீண்டும் கட்டிக்காத்து எமது இளம் தலைமுறையினருக்கும் சொல்லிக் கொடுத்து அவற்றை பேணிப் பாதுகாத்து ஆரோக்கியமாக வாழ பழகிக் கொள்வோம்.

ஏ.எஸ்.எம்.முஜாஹித்
பிரதேச செயலகம்
நாவிதன்வெளி

**இன்று நீங்கள் எங்களை காப்பாற்றுங்கள்...
நாளை நாங்கள் உங்களை காப்பாற்றுவோம்...
இப்படிக்கு - மரங்கள்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதத் தீ பாரதி

திட்டமிட்டு வட்டம் போட்டு சட்டம் செய்த காலம் –
மட்டம் தட்டி மனைக்குள் பூட்டி நோட்டமிட்ட நேரம்
உயர்வென்றும் தாழ்வென்றும் பிரித்து முடக்கி
வைத்த தேசத்தில்
சினந்தெழுந்த சிங்கமாய் தமிழால் கர்ச்சிக்க
புரட்சிக்கவி மலர்ந்தவன்

சாதிவெறி உடைக்க தன்னுடலில் தவழ்ந்த
பூனூல் கழற்றினான்
பெண்ணடிமைத்தனம் தகர்க்க
செல்லம்மாவின் தோளில் கைபோட்டு நடந்தவன்
சுதந்திரதீயை மூட்டவே பேனை முனையால்
போர் புரிந்தவன்

கொள்கை மாறாத கோவலனாய்
சினந்தெழுந்த செந்தமிழனாய் பாட்டிசைத்தவன்
வறுமை வாட்டிய போதும் வாசல் வந்த
பறவைக்கு பசி போக்கியவன்
சமூகமே எதிர்தது நிற்க எழுத்துக்களால்
சத்தமின்றி யுத்தமிட்டவன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவன் வாழும் போது தூற்றி விரட்டிய சமூகமே
வானில் நின்று தமிழ் செய்கையில் போற்றிக் கொண்டாடுதே
இவன் வாழ்ந்த காலம் கொஞ்சம்தான் –
சாதனைகளோ ஏராளம்

முண்டாசு கட்டி மூடத்தனம் விலக்கிய பாரதத் தீ பாரதி
தமிழ் உள்ளவரை இவன் பெயர் வாழ்வது உறுதி
மகாகவியின் கனவுகளுக்காய் சாதிவெறி
ஒழித்த பெண்ணை சமமென ஏற்போம்

கவிதைக் காதலன்
குலசிங்கம் கிலசன்



எனக்கு ஒரு நேரம் வரும் என்று
காத்து இருப்பதை விட
இருக்கும் நேரத்தை சரியாக
பயன்படுத்தினால் போதும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறும்படக் கலையும் எமது பிரதேசமும்

-ச.ருவிதரன்-

கலைகள் பேரன்பானது, கலைகள் எண்ணங்களின் கலவை, கலைகள் ஆற்றலின் ஆன்மா இதுபோல் எத்தனையோ சொற்றொடர்களில் விளக்கிக் கொண்டே போகலாம். குறிப்பாக கலைகளில் குறும்படத்துறைக்கு தனித்துவமான இடமே உள்ளது. குறும்படம் என்ற வார்த்தை அடிக்கடி நாம் சமூக வலைத்தளங்களிலும் கலைசார்ந்த இடங்களிலும் கேள்விப்பட்டுக் கொண்டிருக்கும் ஒன்றாகும். இது ஒரு கலை என்பதை தாண்டி தனிமனித மற்றும் சமூகத்தின் பிரச்சினைகள், உணர்வுகள், எண்ணங்கள் என்பவற்றை வெளிப்படுத்தும் ஒரு கருவியாக காணப்படுகின்றது.



நாம் இன்றய வேலைப்பளுமிக்க நவீன காலத்தில் குறுகிய நேரத்திலாவது கலையை ரசிப்பதற்கே விரும்புகிறோம். அதனால் தான் இன்றய காலகட்டத்தில் குறும்படங்களின் வளர்ச்சியும் பேருற்றாக உள்ளது. பொதுவாக ஒரு குறும்படம் 40 நிமிடம் அல்லது அதற்கு குறைவான நேரத்தைக் கொண்டிருக்கும். உலக சினிமாவில் முதலாவது குறும்படம் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த லோயிஸ் லீ பிரின்ஸ் என்பவரால் வெறுமனே 2.11 செக்கன்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இதுவே முதல் குறும்படமாகவும் முதல் தொழில்நுட்பப் படமாகவும் இடம்பெற்றுள்ளது. அதன் பின்னர் பல்வேறுபட்ட தொழிநுட்ப பரிமாணங்களால் தமிழ் சினிமாவும் தனித்துவமான அடையாளத்தைப் பெற்றுள்ளது.

உலக சினிமாக்களையும் தென் இந்திய சினிமாக்களையும் கண்டு ரசித்தவர்களாக மட்டும் இருந்த எம்மிடம் நமக்கான ஒரு சினிமா தேவை. நமது வாழ்வியலின் வண்ணங்களையும் எங்களுடைய பாணியில் சொல்வதற்கும் உரிய திரைத்துறை தேவை என்ற எண்ணங்கள் எழுந்ததன் விளைவாக இலங்கை சினிமாவும் வளர ஆரம்பித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1947ல் இருந்து சிங்கள சினிமாத்துறை வளர்ச்சியடைந்தாலும் கூட இலங்கைத் தமிழ் சினிமா 1962ம் ஆண்டிற்குப் பிறகே மெதுவாக தன்னுடைய பாதையை ஆரம்பித்தது. “தோட்டக்காரி” என்ற திரைப்படமே இலங்கையில் வெளியாகிய முதல் தமிழ்த் திரைப்படமாகும்.

சிங்கள சினிமா தனித்துவமான பாணியில் வளர்ச்சியடைந்து கொண்டு வந்தாலும். இலங்கைத்தமிழ் சினிமா அதற்கிணையாக வளரவில்லை. காரணம் தமிழ் மக்கள் இந்திய சினிமா மீது கொண்ட ஆர்வமும் அதனை தமக்கான சினிமா என உள்வாங்கிக் கொண்ட விதமும் என்பதால், மறுப்பதற்கில்லை.

இலங்கையில் தமிழ் திரைப்படங்கள் இதுவரை 100ற்கும் குறைவாகவே எடுக்கப்பட்டுள்ளன. தொழில்நுட்பப் பற்றாக்குறைவு பாரியளவான நிதி, குறைவான ரசிகர்கள் கூட்டம் மற்றும் செலவுக்குரிய வருமானமின்மை போன்ற பல்வேறு காரணங்களினால் முழு நீளத் திரைப்படங்கள் குறைவாகவே தயாரிக்கப்படுகின்றன. ஆனால் இன்றைய காலத்தில் குறும்படத்துறையின் வளர்ச்சி இலங்கையில் அபரீதமாக உள்ளது. காரணம் குறும்படத்துறை மீது இளைஞர்கள் கொண்ட ஆர்வமும், சமூக வளைத்தள விருத்தியும், புதிய DSLR மற்றும் கையடக்கத் தொலைபேசியின் வருகையுமாகும்.

ஒரு குறும்படம் செய்ய வேண்டுமென்றால் ஒரு பாரிய வளங்கள் தொகுதியாக (மனிதவளம், நிதிவளம், தொழில்நுட்பவளம்) பயன்படுத்த வேண்டும் என்ற காலம் மாறியது. படைப்பாற்றல் இருக்குமென்றால் எங்கள் கையில் இருக்கும் SMART தொலைபேசிகள் மூலமே ஒரு குறும்படத்தை தயாரித்து அதனை சமூக வலைத்தலங்களில் மக்கள் பார்வைக்காக வழங்க முடியும். அதனை பார்வையாளர்களும் விரும்பி ஏற்கின்றனர்.

இன்று YOUTUBE தளம் மூலமாக இலங்கையின் குறும்படங்கள் நாளாந்தம் வெளியாகிக் கொண்டே இருக்கின்றன. வடமாகாணம், மத்திய மாகாணம், கிழக்கு மாகாணம் இவை மூன்றிலிருந்தும் தமிழ் குறும்படங்கள் உருவாகினாலும் மற்றைய மாகாணங்களுடன் ஒப்பிடம் பொழுது கிழக்கு மாகாணத்தில் குறைவான குறும்படங்களே தயாரிக்கப்படுகின்றன.

இந்திய சினிமாவினை ஆட்சி செய்த பாலுமகேந்திராவைக் கொண்ட கிழக்கு மண்ணில் திரைப்படக் கலைக்கு பஞ்சமென்றால் கவலைதான். இருந்த போதிலும் இன்றைய இளைஞர்களின் ஆற்றலால் சற்று வளர்ச்சி கண்டு வருகின்றது. இதில் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் உள்ள பாரம்பரிய வரலாறு மிக்க நாவிதன்வெளிப் பிரதேசத்தில் குறும்படத்துறை வேரூன்ற ஆரம்பித்திருக்கின்றது. (அதில் நானும் ஒருவனாக இருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது.) குறிப்பாக 2016ல் இருந்து நான் என்னுடைய குறும்படங்கள் உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு இன்று வரை 10ற்கு மேற்பட்ட குறும்படங்கள் 02 ஆவணப்படங்கள் வரை செய்திருக்கிறேன். அதே போன்று 03 தேசிய ரீதியிலான விருதுகளையும் பெற்றுள்ளேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப காலத்தில் குறும்படங்களில் இணைந்து வேலை செய்வதற்கும் நடிப்பதற்கும் கலைஞர்களை அடையாளங்கண்டு கொள்வதில் பல்வேறு சிரமங்கள் இருந்தது. ஆனால் இன்று நாவிதன்வெளிப் பிரதேசத்தில் பல்வேறு கிராமங்களில் குறும்படக் கஞைர்கள் உருவாகியிருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது. தொடர்ச்சியாக குறும்படக் கலைஞர்கள் அதிகரிக்கின்ற சந்தர்ப்பத்தில் எமது நாவிதன்வெளிப் பிரதேசத்தின் தனித்துவ படைப்புக்கள் பலவற்றை தொடர்ந்து உருவாக்கக் கூடிய சூழலை ஏற்படுத்தலாம்.

இன்றைய நாட்களில் தகவல்களையும், பிரச்சினைகளையும், அதற்கான தீர்வுகளையும் எழுத்து மூலமாக ஏற்பதை விட வீடியோ மூலமாக ஏற்றுக் கொள்வதில் மக்கள் அதீத ஆர்வம் காட்டுகின்றனர். இதற்கு குறும்படத்துறை ஒரு பாலமாக இருக்கின்றது.

சமூகம் சார்ந்து பேசக்கூடிய குறும்படங்கள் புரட்சிக்கான ஆயுதங்கள் என சிங்கள இயக்குனர் பிரசன்ன விதானகே தன்னுடைய நூலில் குறிப்பிட்டுள்ளார். கலைகள் ரசிப்பதையும் தாண்டி சமூகத்தை சிந்திக்கவும் வைக்கக் கூடியது.

இயக்குனர், ஒளிப்பதிவாளர், படத்தொகுப்பாளர், இசையமைப்பாளர், நடிகர்கள் இது போன்ற எத்தனையோ கலை ஆர்வலர்களின் எண்ணங்கள் சேர்ந்ததே ஒரு குறும்படம். இவர்கள் அனைவரும் இணைந்தால் 1 நிமிடத்தில் தங்களுடைய படைப்பால் சமூகத்தில் குறித்தளவு மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்றால் மறுப்பதற்கில்லை.

தம்மிடம் உள்ள கலையை வெளிப்படுத்த வேண்டும் என்பதைத் தாண்டி அதை உணர்வு பூர்வமானதாக வழங்க வேண்டும். நாவிதன்வெளிப் பிரதேசத்தைப் பொறுத்தவரை பலர் குறும்படத்தறையில் ஆர்வமாக உள்ளனர். ஆனால் அதை வெளிப்படுத்தலில் தயக்கம் காட்டுகின்றனர். ஏனெனில் கல்வி, தொழில் என்று வேறு வழிகளில் சென்று கொண்டிருப்பதால் குறும்படத்துறையில் பயணிக்க முடியுமா? என்றும் சிலர் சிந்திக்கின்றனர்.


சிலருக்கு குறும்படத்துறை தொழில்வான்மையாகவும் அதே நேரம் விருப்பமாகவும் இருக்கும். ஆனால் வேறு தொழில்வான்மையாளர்கள் கூட தங்களுடைய விருப்பத்தினாலும் ஆர்வத்தினாலும் தங்களுக்கு கிடைக்கின்ற நேரங்களில் குறும்படங்களை தயாரிக்கின்றனர். எங்களுக்கு ஒன்றின் மீதான படைப்பாற்றல் இருக்குமாக இருந்தால் அதை எங்கிருந்தும் வெளிப்படுத்த முடியும்.

தவறுகள் தொடர்பாக அஞ்சுவதும் தவறுகள் மீதான கற்றலின்மையும் தொடர்ந்து பலரை குறும்படத்துறையிலிருந்து இல்லாமல் செய்துள்ளது. இன்று நாம் திரைப்படக் கல்லூரிகளுக்கு சென்றுதான் சினிமாவைக் கற்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. இன்று எத்தனையோ சினிமாக் கற்றல் மூலங்கள் வலைத்தளத்தினூடாக உள்ளன. அதனைப் பயன்படுத்தியே நானும் என்னுடைய குறும்படக்கற்றலை விருத்தி செய்து கொண்டேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் எனக்கும் குறும்படத்துறைக்கும் எவ்வித தொடர்பும் ஆரம்பத்தில் இல்லை. நான் உயர்தரத்தில் சினிமா சார்ந்த பாடங்கள் கற்கவில்லை. பல்கலைக்கழகத்தில் கூட சமூகப் பணிசார்ந்த பட்டமே முடித்தேன். ஆனால் சுய கற்றலும், குறும்படத்துறை மீதான ஆர்வமும் ஒவ்வொரு படைப்புக்களை மேற்கொள்ளும் போது விடுகின்ற வழுக்கள் மீதான கவனமும் இன்று என்னையும் ஒரு இளம் குறும்பட இயக்குனராக மாற்றியிருக்கின்றது. நான் பல இடங்களில் சமூகப்பணி கல்வியின் பல்வேறு அணுகு முறைகளை திரைப்படங்கள் மூலமாகவும் வெளிப்படுத்துவதற்கான ஓர் வாய்ப்பாக பயன்படுத்தியுள்ளேன். நான் மட்டுமல்ல நாம் என்ற ஒரு இளைஞர் குறும்பட ஆர்வலர்கள் நாவிதன்வெளி பிரதேசத்தில் உள்ளனர். நமது கலைகளை நாம் ரசிப்பதுதான் தொடர்ந்து எம்மைப் போன்ற கலைஞர்களை ஊக்கப்படுத்துகிறது.

குறுகிய நேரம் செலுத்துவோம் எமது பிரதேச குறும்படங்களையும் ரசிப்பதற்கு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் நகரை அழகுபடுத்தும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் எமது பிரதேச ஓவியக் கலைஞர் வினாயகமூர்த்தி ஜீவராசா அவர்களால் வரையப்பட்ட சில ஓவியங்கள்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்கம் காக்கும் கலை

வி. அதிஸ்ரா

உலகை பார்க்க கண்கள் வேண்டும்
இசையை ரசிக்க என்ன வேண்டும்
அழகை ஆதரிக்க அன்பு வேண்டும்
கலையும் இலக்கியமும் கொண்டு
காலத்தை கண்டு கொள்ளலாம்

உலகை படைத்தவன் இறைவன்
இசை இலக்கியத்தை படைத்தவர் இறைவர்
இன்பமூட்டும் இசையால்
சாதி மத பேதங்கள் சங்கமமாகும்
சன்மார்க் நெறிகள் தழைத்தோங்கும்

நபிகள் நாயகத்தின் நன்மொழியும்
யேசுநாதரின் கருணையும்
சரஸ்வதியின் ஆயகலை அறுபத்தி நான்கும்
ஏயமாய் எடுத்துரைப்பது இசை இலக்கியம்
துய உள்ளத்தால் துன்பம் இன்றி வாழ்வோம்

கூவும் குயிலுக்கு இசை கற்பித்த குரு யார்?
ஓடம் நிதியிற்கு இசை நயம் கற்பித்தது யார்?
பாடும் மீன் இனத்திற்கு பயிற்று வித்தது யார்?
வாடும் மனதிற்கு தேடும் சுகத்தை
வாரி வழங்கும் இசையும் இலக்கியமும்

கண்கள் இன்றி காலத்தை பார்க்கலாம்
காதுகள் இன்றி ஒலியை ரசிக்கலாம்
சிறகுகள் இன்றி சிம்மாசனத்தில் பறக்கலாம்
உறவுகள் இன்றி உன்னதமாக பழகலாம்
இசையும் இலக்கியமும் இருந்தால்...

நாடும் சுகத்தை நயமாய் தந்திடும்
வாடும் இதயத்தை வளமாய் மாற்றிடும்
ஓடும் நதியை இசையாய் ரசித்திடும்
கூவும் குயிலை குருவாய் போற்றிடும்
இசையும் இலக்கியமும் இசையால்
- நுகர்ந்திடலாம்

ஓ... மனிதனே உன்னத இலக்கியத்தால்
ஈரானிய இலக்கியமும்...
உலக மக்களால் இரசிக்கப்படும்
மொழி, சாதி, மத பேதங்கள்
கடந்த இலக்கியமும் இசையும்
இறைவனின் கொடைகளே

கமு/சது/ விவேகானந்தா மகா வித்தியாலயம்
கனிஷ்ட பிரிவு கவிதை எழுதுதல் போட்டியில்
முதலிடம் பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நாவிதன்வெளிப் பிரதேசத்தில்
# அழிந்து செல்லும் கலைகள்

-கோ.விஜயராஜா-

கலை என்பது மனித திறன் வெளிப்பாடு என்பது கெனிக்மன் எனும் அறிஞரின் கருத்தாகும். அந்த வகையில் மனிதன் வையகத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு கலைகள் மிக பெரிய வகிபாகமாக உள்ளது என்றால் மிகையாகாது. மனிதனின் பல வகை உணர்வுகள் உணர்ச்சிகளை மிக அழகாக வெளிப்படுத்தும் தன்மை, பாடலாக, ஆடலாக, கவிதையாக, ஓவியமாக, சிற்பமாக பல கலை வடிவங்களில் பரிணமிக்கின்றன. இது மனித வாழ்வியலின் ஆரம்பகால வாழ்வியலோடு பின்னி பிணைந்துள்ளதால் அக்கால மனித நாகரீகங்களின் ஊடாக இதனை அறிய முடிகின்றது. அந்த வகையில் கலைகள் காலத்தின் கண்ணாடிகள் என்பர். மனிதனின் உளவள வெளிப்பாடுகளில் அழகுணர்ச்சியை நெறிப்படுத்தும் கலைகள் ஒரு காத்திரமான மனிதனை உருவாக்குவதில் பெரும் பங்காற்றி நிற்கின்றமையை நாம் காணமுடிகின்றது.

சாதி, சமயம் ,மொழி, நிறம் அனைத்தையும் கடந்து அனைவரையும் தலையாட்டி ரசிக்கும் தன்மைக்கு கொண்டு வந்து ரசிகனாக மாற்றும் திறன் கலைக்குரியது என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த வகையில் பாரம்பரியமாக கலை வளர்ந்த பிரதேசங்களில் நாவிதன்வெளி பிரதேசமும் ஒன்றாகும். இப்பிரதேசத்திற்கே உரித்தான கலைகளாக கூத்து, கரகம், கும்பி, காவடி, வில்லுப்பாட்டு, நாடகம், கலிகம்பாட்டம் போன்ற கலை வடிவங்கள் பன்நெடுங்காலமாக ஆற்றுகை செய்யப்பட்டு வந்துள்ளமையை நாம் காணமுடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வகையில் 11ம் கிராமம், 12ம் கிராமம், 7ம் கிராமம், 4ம் கிராமம் சொறிக்கல்முனை போன்ற பழம் பெறும் கிராமங்களில் கூத்த, களிகம்பாட்டம், கரகம், வில்லுப்பாட்டு போன்ற கலை படைப்புக்கள் காலத்திற்கு காலம் ஆடப்பட்டு வந்துள்ளமையை ஆதார பூர்வமாக காணமுடிகின்றது. 15ம் கிராமத்தில் கந்தன் சிவா அண்ணாவியார், கூத்து கலையை வளர்த்தவராகவும் 11ம் கிராமத்தில் அழகையா அண்ணாவியார் நாவிதன்வெளி நாட்டுக்கூத்துக் கலைக்கு உயிரோட்டம் கொடுத்தார். இவர் மரணித்ததன் காரணமாக நாட்டுக்கூத்து சற்று உயிரோட்டம் இழந்ததை நாம் மறுக்க முடியாது. அது மட்டுமன்றி 1990களில் இடம் பெற்ற இனக் கலவரத்தின் தாக்கம் நாவிதன்வெளி பிரதேசத்தின் கலைகளின் பரிமானத்தை சீர்குலைத்தது என்றால் மறுப்பதற்கில்லை. இதன் பின்னரான சுனாமி அனர்த்தம், தற்போதய கொரோனா சுழல் நமது பாரம்பரிய கலைகளை புத்துயிர் பெறச்செய்வதற்கு மேலும் தடையாக அமைந்துள்ளன.

15ம் கிராமம் கண்ணகி அம்மன் ஆலையத்தில் வசந்தன், கூத்து, கரகாட்டம், காவடியாட்டம் என்பன நாகலிங்கம் பொன்னையா போன்ற கலைஞர்களால் உற்சப காலங்களில் வளர்க்கப்படுவதாக நாம் காணமுடிகின்றது. அது போல் அமைதிப்புயல் கலா மன்றம், 12ம் கிராமத்தில் இம்தீயாஸ் போன்ற கவிஞர்களால் கலிகம்பாட்டம், நவீன நாடகம், கலைஞர் கௌரவிப்பு என்று கலை பரிணாமங்களை பாதுகாக்கும் முயற்சியில் சிறந்து விளங்குவதாகவும் காணக்கூடியதாகவுள்ளது. 1990ம் ஆண்டுக்குப் பின்னர் இக்கலைவளர்த்த கலா மன்றங்களில் நவீன நாடகத்துறையை வளர்த்த 15ம் கிராமம் இளையநிலா கலா மன்றம், இளம்தளிர் கலா மன்றம் போன்றவையும் 11ம் கிராமத்தில் புத்தொளி நாடக மன்றம், சொறிகல்முனையிலும் பல கலைஞர்கள் யேசு காவியத்தை தொகுத்து மிக அழகாக நாடகமாகவும், கூத்து வடிவமாகவும் வழங்கி எமது பாரம்பரிய கலைக்கு புதிய பரிமாணங்களை ஏற்படுத்தியவர்கள் என்பது இங்கு நினைவுசாரத்தக்கது.


நாவிதன்வெளி பிரதேசத்தில் அழிந்து செல்லும் கலைகள் என்ற தலைப்பின் கீழ் பல கலைகளை தொகுத்து ஆராய இச்சிறு நோக்கு போதாது. கலை என்ற சொல் பல விரிந்த பரப்பை கொண்டதாக அமைகின்றது, இருந்தும் காலத்தின் கட்டாய தேவை நாவிதன்வெளிப் பிரதேசத்தில் பாரம்பரிய கலைகளை பாதுகாக்கும் கடப்பாடு இங்கு வாழும் ஒவ்வொரு குடிமகனுக்கும் உரித்தான கடமையுமாகும். அந்த வகையில் பிரதேச செயலாளர், கலாச்சார உத்தியோகத்தர்கள் ஆற்றிவரும் பணி மகத்தானதும் பாராட்டத்தக்கதுமாகும். இச் சிறு கலை நோக்கு கூட அவர்களது கலை கலாச்சாரங்களை பாதுகாக்கும் நோக்குடன் எடுத்த முயற்சிகளில் ஒன்றாகும் என்றால் மிகையாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவிதன்வெளி பிரதேசத்தில் பிரதேச செயலாளர், கலாசார பரிவு அவ்வப்போது கலாச்சார வள நிலையத்தின் ஊடாக அழிந்து செல்லும் எமது நாவிதன்வெளி பிரதேசத்தில் வாழும் மூவின மக்களின் பண்பாட்டுக் கலாச்சார விழுமியங்களை பாதுகாக்கும் நோக்குடன் பல கலை நிகழ்ச்சிகளையும் கிராமங்களில் கலாச்சார விழாக்கள், கலைஞர் கௌரவிப்பு மற்றும் ஊக்குவிப்பு உதவிகள் என்று முடிந்தவரை கலை கலாச்சார விழுமியங்களை பாதுகாக்கும் முயற்சியில் தங்களை அர்பணித்து கடமையாற்றி வருவதை காண்கிறோம். கலைஞர்கள் வரிசையில் அவர்களையும் பாராட்ட வேண்டியது காலத்தின் கடமையாகும்.

மேலும் கலைப்படைப்புக்களை நாவிதன்வெளி பிரதேசத்தில் மாணவர் மத்தியிலும் கல்வி ரீதியாகவும் எமது பாரம்பரியகலைகள் மெருகூட்டப்படுவதையும் குறிப்பிடலாம். நாடக அரங்கியல் என்ற பாடத்தின் ஊடாகவும் வாணி விழா, தமிழ்த் தின விழா, மாணவர் மன்றம் போன்ற நிகழ்வின் ஊடாக கூத்து, கும்மி, கரகம், கோலாட்டம், றவான், கலிகம்பாட்டம் போன்ற நிகழ்வுகள் பகுதி அளவிலாவது நடாத்தப்பட்டு வருவது ஓரளவு கலை கலாச்சாரத்தை பாதுகாக்கும் முயற்சியாக உள்ளது.

நாவிதன்வெளி சமூக மட்டத்தில் எமது பாரம்பரிய கலைகளை பாதுகாக்கும் நோக்குடன் செயற்பட்டவர்கள் தங்கள் தொழில் நிமிர்த்தம் வெளிநாடுகளுக்கு சென்றமையும் இளைய சமூகத்தவர்களிடம் இந்த பாரம்பரிய கூத்து, கரகம் போன்ற கலைகள் இரசிக்கப்படாத ஒரு நிலைப்பாடு காணப்படுவதை நாம் நோக்க முடிகின்றது. அத்துடன் வீட்டுக்கு வீடு தொலைக்காட்சிகள் தொடர் நாடகங்களை ஒளிபரப்பி வருவதும் இரசிகர்களை ஒரு வகையில் நெறிப்படுத்தி வருவதும் எமது பாரம்பரிய கலையின் வீழ்ச்சிக்கு வழிவகுத்து நிற்கின்றது என்பது எனது கருத்தாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சேர்ந்தே இருப்பது வறுமையும் புலமையும்" என்பது போல் படைப்பாளிகள் கலைஞர்கள் தமது அன்றாட வாழ்விற்கு உழைக்க வேண்டி உள்ளதும் உலகமே பொருளாதாரத்தை நோக்கி ஓடிக்கொண்டு இருக்கும் போது பொது நோக்குச் சிந்தனைகள், கலை படைப்புக்கள் காரூண்ய கொள்கைகள் மருவி போவதும் இக்காலகட்டத்தில் நிகழ்ந்து வருவதை நாம் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இருப்பினும் இளம் சமூகத்தினர் இந்த கலை ஓட்டத்தில் ஓடாதிருக்க சமூக அக்கறையாளர்கள் சிலர் நடவடிக்கைகள் எடுத்து வருவதும் குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் எமது பிரதேச செயலாளர் மதிப்பிற்குரிய ரங்கனாதன் ஐயா அவர்கள் ஆலையங்களில் களியாட்டம் போன்ற போர்வையில் மேலைத்தேய நடன நிகழ்ச்சிகளை தடை செய்துள்ளமை எமது கலாச்சார நிகழ்வுகளுக்கு ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தும் என்று கூறலாம்.

மேலும் எமது நாவிதன்வெளிப் பிரதேசத்தில் அழிந்து போகும் கலைகளை வளர்ப்பதற்கு சமூக மட்டத்தில் உள்ள கலை மன்றங்களை ஊக்குவிப்பதோடு புதிய கலை மன்றங்களை உருவாக்கி மருவி வரும் எமது கலைகளான றவான், கலியாட்டம், கூத்து, கரகம், கும்மி, கோலாட்டம், போன்ற கலை படைப்புக்களுக்கு போட்டி நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்து பரிசுகளை வழங்குவதன் மூலமும் எமது கலைப்படைப்புகளுக்கு உயிர் கொடுக்க முடியும் என்பதுடன் வறுமையில் உழலும் எமது பாரம்பரிய கலைஞர்களுக்கு மாதாந்த கொடுப்பனவுகள், வருடாந்த கொடுப்பனவுகள் போன்றவற்றை வழங்குவதன் மூலம் எதிர்கால சந்ததியினரும் இதனால் தூண்டப்பட்டு பாரம்பரிய கலைகளை வளர்ப்பதற்கு ஏதுவாக அமையும் என்று கூறலாம்.

இந்த சிறு அரும்புக் கட்டுரையில் நாவிதன்வெளியில் எமது பாரம்பரிய கலைகளை வளர்த்த பல கலைஞர்கள் சேர்க்கப்படாமல் இருக்கலாம் மிகக் குறுகிய நேரத்தில் இவ் அரும்பு மலராவதால் விடுபட்டு இருக்கலாம். கருணை கூர்ந்து எதிர்வரும் காலங்களில் நாவிதன்வெளி பிரதேசத்தின் கலைகள் மிக ஆழமாக கிராம மட்டத்தில் ஊடுருவி பார்க்கப்பட்டு வெளிக் கொண்டு வருவதற்கு எதிர்வரும் காலங்களில் வெளியாகும் கலை படைப்புக்கள் வழிவகுக்கும் என எதிர்பார்க்கிறேன்.

அறிவியல் ரீதியான விமர்சனங்களுக்கு 0776004446.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிஞ்சு மனங்கள்

துள்ளித் திரிந்த காலம் அது
இன்று ஒடுங்கி கிடக்கிறோம் வீடுகளில்
சந்தோசமாய் விளையாடினோம் நண்பர்களுடன்
இன்று வீடுகளே தஞ்சம் - சிறுவர்கள் எமக்கு

உணவு உண்ணக்கூட நேரம் இருக்காது
பாடசாலை வகுப்புக்கள் என்று ஓய்வு இருக்காது
இன்று ஏனடா இந்த பாரிய விடுமுறை
ஏங்கித் தவிக்கிறது சிறிய எம் இதயம்


பாடசாலைகள், கோயில்கள், பள்ளிவாசல்கள் மட்டுமா
மூடப்பட்டிருக்கின்றது
பக்கத்து வீட்டுக் கதவுகளும், சில உறவுகளின் மனங்களும்
வலிக்குதையா சிறுவர்கள் எம் சின்ன இதயம்
கருணை இறைவா விடை கொடுப்பாய் கொரோனாவுக்கு
விடுதலை தருவாய் - சிறுவர்கள் எமக்கு

**அன்ரனி ராஜ் சர்மி**

கமு/சது/ அல்-தாஜூன் வித்தியாலயம்
சிறுவர் பிரிவு கவிதை பாடல் போட்டியில்
முதலிடம் பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவிதன்வெளி பிரதேச ஓவியக் கலைஞர் செல்வி .ந.பிருந்தா அவர்களின் சில படைப்புக்கள்



செல்வி .ந.பிருந்தா
-அன்னமலை-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாயாடி ஆமை

சிறுவர் கதை

-ச.சரண்யா-

ஓர் நதிக்கரையோரம் ஓர் ஆமை வசித்து வந்தது. அதற்கு கங்கா, ஜமுனா என்று இரு நண்பர்கள் இருந்தனர். இவர்களை காணும் போதெல்லாம் ஆமை "வள வள வென்று" பேசிக் கொண்டே இருக்கும். ஆமையின் வள வள தாங்க முடியாமல் கோபமாக செல்ல முயன்றனர். இதை கண்ட ஆமை "ஓ.. ஓ.. வென" அழ ஆரம்பித்தது. ஆமையினை பிரிய மனமில்லா இரு நண்பர்களும் "நாங்கள் இங்கிருந்து வேறு நதிக்கரையோரம் செல்லப் போகிறோம் நீயும் இங்கிருந்து வா" என்றனர். அதற்கு ஆமை "ஆனால் எனக்கு உங்களை போல் இறக்கை இல்லையே" என்றது.



அப்போது இரு பறவைகளும் ஓர் குச்சியினை எடுத்து இருவரும் ஒவ்வொரு முனையினை வாயால் கௌவிக் கொண்டன. நடுவில் ஆமை தன் வாயால் கௌவிக் கொண்டது. குச்சியினை பறவை தூக்கிக் கொண்டு பறவை இரண்டும் உயர உயர பறந்தன. எல்லாம் நன்றாகதான் இருந்தது. ஆமை வாயை திறக்கும் வரை. ஆமை வள வளக்க வாயைத் திறந்தது. அவ்வளவுதான் தரையில் "டபார்" என விழுந்தது.

பின் தன் நிலை குறித்து தனக்குள்ளே நொந்து கொண்டது.

"அவ் வாயாடி ஆமை"

115A, பிள்ளையார் கோவில் வீதி, அன்னமலை-01.
திறந்த பிரிவில் சிறுவர் கதை ஆக்கப் போட்டியில் முதலிடம் பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓடிப் 'போ' கொரோனாவே

பள்ளி சென்று பாடம் படிக்க
பாலர் எமக்கு பயமாய் இருக்கு
பாங்குடன் ஒன்றாய் பழகிடும் நண்பரை
பார்த்துப் பேச தவிப்பாய் இருக்கு
போதும் உன் துன்பம் எமைவிட்டு
ஓடிப்போ கொரோனாவே...


உறவோடு கலந்து மகிழ்ந்து இருக்க
உல்லாசமாய் உலா வந்த எமை
ஊரின் உள்ளே வீட்டில் வைத்து
சிறையில் தள்ளி பூட்டி விட்டாயே
போதும் உன் துன்பம் எமை விட்டு
ஓடிப் போ கொரோனாவே...

அன்பாய் பார்த்து புன்னகை செய்ய
அணியும் முகக்கவசம் தடையாய் அமைய
உழைப்பும் இன்றி உணவும் இன்றி
வாடும் எமக்கு மகிழ்ச்சி எப்போ
போதும் உன் துன்பம் எமைவிட்டு
ஓடிப் போ கொரோனாவே...



**குமாரராசா அஸ்விக்கா**
கமு/சது/ திருச்சிலுவை மகா வித்தியாலயம்
சொறிக்கல்முனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாட்டார் இலக்கியம்

-ம.சியாணுதன்-

"தமிழுக்கு அமுதென்று பேர் - அந்த தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" எனும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனனின் தமிழ் வரிகளை உங்களிடத்தில் முன்வைத்து எனது கட்டுரையை தொடங்குகிறேன்.

நாட்டார் இலக்கியம் வளர்ந்து வரும் அறிவுத்தறைகளில் ஒன்றாகும். ஒரு நாட்டு மக்களின் நாகரீகத்தை, பண்பாட்டை, பழக்க வழக்கங்களை, வரலாற்றை, நாட்டு நடப்பை உண்மையான முறையில் பிரதிபலித்துக்காட்டும். நாட்டுப்புற இலக்கியங்கள் காலத்தைக் காட்டும் கண்ணாடி எனலாம்.

